இது ஒரு மாதாந்த தகவல் மஞ்சரி a monthly information digest

செப்ரெம்பர் 2025 September | இதழ் 416 Issue

# தமிழர் தகவல்
TAMILS' INFORMATION

ESTD From The Community To The Community 1991

கனடிய மூத்த தமிழ் இதழ்

Premier Canadian Tamil Journal



**நல்லூர் கோவில் பெருந்திருவிழா**



**மன்னார் மடுமாதா வருடாந்த உற்சவம்**

## ஸ்காபரோ, மார்க்கம் இடைத்தேர்தல்கள் 29ம் திகதி

## சித்துப்பாத்தி புதைகுழியில் 200 மனித எலும்புக்கூடுகள்

## கன்சர்வேடிவ் பொலிவியர் மீண்டும் எம்.பியானார்

## குடிவரவு விண்ணப்பங்கள் நிராகரிப்பு அதிகரிப்பு

சமூகத்துடன் இணைந்த வளர்ச்சி ஸ்தாபிதம் -1991

35 வது ஆண்டில் th Year

Growing with the Community ESTD-1991

ஆசிரியரிடமிருந்து... **From the Editor**

தமிழர் தகவல்
TAMILS' INFORMATION

ISSN 1206-0585

**ஆரம்பம்**
பெப்ரவரி 1991

P.O. Box-3, Station F
Toronto, ON M4Y-2L4,
Canada

**தொலைபேசி:**
416 920 9250

**மின்னஞ்சல்**
tamilsinfo@sympatico.ca

**தயாரிப்பு**
ஈழத்தமிழர் தகவல் நிலையம்
ரொறன்ரோ &
தமிழர் தகவல் ஆய்வுப் பிரிவு

**வெளியீடு**
அகிலன் அசோஷியேற்ஸ்

**முதன்மை ஆசிரியர்**
திரு எஸ். திருச்செல்வம்

**இணை ஆசிரியர்**
றஞ்சி திரு

**உதவி ஆசிரியர் &**
**தயாரிப்பு முகாமையாளர்**
சசி பத்மநாதன்

**உதவி ஆசிரியர்கள்**
குயின்ரஸ் துரைசிங்கம்
அனோஜினி குமாரதாசன்

**பொது முகாமையாளர்**
ஆர். ஆர். ராஜ்குமார்

**பொதுமக்கள் தொடர்பு**
என். விமலநாதன்
என். குமரதாசன்
இ. சிவலிங்கம்
வே. விவேகானந்தன்
ப. சிவசுப்பிரமணியம்

**தொழில்நுட்ப உதவி**
ஹரன்கிறாஃப்

**மாதாந்தம்**
5000 பிரதிகள்

**ஆண்டு மலர்**
6000 பிரதிகள்

**இணையம்**
www.tamilsinformation.info

# அதிரடி வேறுபாடு

இலங்கை அரசியலின் நிகழ்காலம் ஒருவகையில் புரட்சிகரமானதாக மாறிவருகிறது. ஊழல், மோசடி, லஞ்சம் ஆகியவற்றை ஒழிப்பதாகக் கூறி ஆட்சிக்கு வந்த ஜே.வி.பி. முதல் வருடத்துக்குள்ளேயே அதனை நடைமுறைப்படுத்த ஆரம்பித்துவிட்டதாக மக்கள் கருதுகின்றனர்.

யுத்த வெற்றி வீரர்களாக தம்மை எப்போதும் காட்டிக் கொள்ளும் ராஜபக்சக்களே ஜே.வி.பி.யின் முதல் இலக்காக இருப்பார்களென எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் இலங்கையின் மேல்தட்டு வர்க்க அரசியல் வம்சத்தின் சுவீகாரப் பிள்ளையாக விளங்கும் ரணில் விக்கிரமசிங்க சுறாவாக அகப்பட்டுள்ளார்.

கைது செய்யப்படும்வரை சுகதேகியாக, மிடுக்காக, ஜே.வி.பி. அரசை நாளாந்தம் எச்சரித்து வந்த ரணில், கைதானதும் 'திடீர்' நோயாளியா - னார். நீரிழிவு, இரத்த அழுத்தம், இருதய நோய் என்னும் அனைத்தும் இவருக்கு இருப்பதாக மருத்துவர்கள் பட்டியலிட்டனர். இதனால் ஓர் இரவு கூட சிறையில் இருக்காது, மருத்துவமனைகளில் இருந்தவாறு வீட்டிலிருந்து உணவெடுத்து, நீதிமன்றம் பிணை வழங்கியதன் பின்னர் வீடேகியுள்ளார்.

எதிரிகளை இணைத்து மீண்டும் ஆட்சிக் கதிரையேற முனைந்த ரணிலை, கடும் நோயாளியாகக் காட்டி அரசியலிலிருந்து ஓய்வுபெற வைத்துள்ளனர் அவரது வழக்கறிஞர்கள் என்று ஜே.வி.பி. விமர்சனம் செய்து வருகிறது.

வசதியான அரசியல்வாதிகளுக்கு இவ்வாறான வாய்ப்பு எப்போதும் உண்டு. ஏற்கனவே கைதான வேறு பல அரசியல்வாதிகள் பிணையும் கிடையாது சிறையில் உள்ளனர். இதனை எழுதும்வேளையில் முன்னாள் அமைச்சர்களான ராஜித சேனரத்ன, நிமால் லான்ச மற்றும் முன்னாள் எம்.பி. அத்துரலிய ரத்ன தேரர் ஆகியோர் கைதாகி காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இந்தத் தொடரில் கோதபாய ராஜபக்ச, மகிந்த ராஜபக்சவின் மனைவி, சஜித் ராஜபக்சவும் அவரது மனைவியும் என ஊடகங்கள் பெயரிடுகின் - றன. ரணிலின் கைது மற்றும் விளக்கமறியல் பற்றி அவர் கைதாவதற்கு முன்னரே ஒரு சமூக ஊடகம் முன்னறிவிப்புச் செய்ததால், புதிய ஊடக அறிவிப்புகளை நம்பிக்கையில்லையென தவிர்க்க முடியாதுள்ளது.

இலங்கையின் பல கொலைகளுக்கும், போதைப்பொருள் கடத்தலுக்கும் காரணமான பாதாள உலகைச் சேர்ந்த ஐவரை இந்தோனேசியாவின் தலைநகரான ஜகர்த்தாவில் வைத்து கைது செய்துள்ளனர் இலங்கை - யிலிருந்து சென்ற பொலிசார்.

யாழ்ப்பாணத்தில் அரியாலை சித்துப்பாத்தி மயானத்தில் அகழப்படும் மனிதப் புதைகுழிகளிலிருந்து இருநூறு வரையான எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டுள்ளன. பல வருடங்களுக்கு முன்னர் ராணுவ கோப்ரல் ராஜபக்ச தெரிவித்த தகவல்கள் உண்மையென நிரூபணமாகி வருகிறது.

தென்னிலங்கையை 'சுத்தப்படுத்த' அநுர அரசு எடுத்துவரும் அதிரடி-களை, சித்துப்பாத்தியில் காட்டுவதற்கு இதுவரை தயக்கம் காட்டுகிறது. இதற்குப் பெயர்தான் இனவாதமா?

**திரு எஸ். திருச்செல்வம்**

தமிழர் தகவல்
TAMILS' INFORMATION

ISSN 1206-0585

**Established**
February 1991

P.O. Box-3, Station F
Toronto, ON M4Y-2L4,
Canada

Tel: 416 920 9250

**E-mail**
tamilsinfo@sympatico.ca

**Produced by**
Eelam Thamil Information Centre (ETHIC) of Toronto & Thamil Information Research Unit (THIRU)

**Published by**
Ahilan Associates

**Editor in chief**
Thiru S. Thiruchelvam

**Associate Editor**
Ranji Thiru

**Assistant Editor and Production Manager**
Sasi Pathmanathan

**Assistant Editors**
Quintus Thuraisingam
Anojini Kumaradasan

**General Manager**
R. R. Rajkumar

**Public Relation**
N. Vimalanathan
N. Kumaradasan
R. Sivalingam
V. Vivekananthan
P. Sivasubramaniam

**Technical Support**
Haran Graph

**Monthly**
5000 Copies

**Annual**
6000 Copies

**Website**
www.tamilsinformation.info

# கன்சர்வேடிவ் தலைவர் பியர் பொலிவியர் மீண்டும் எம்.பி.



கனடிய கன்சர்வேடிவ் கட்சியின் தலைவர் பியர் பொலிவியர், கடந்த மாதம் 18ம் திகதி இடம்பெற்ற அல்பேர்ட்டா BattleRiver - Crowfoot தொகுதிக்கான இடைத்தேர்தலில் வெற்றிபெற்று மீண்டும் எம். பியாகியுள்ளார். 214 வேட்பாளர்கள் போட்டியிட்ட இந்த இடைத்தேர்தலில் எண்பது (80) வீதத்துக்கும் அதிகமான வாக்குகள் பியர் பொலிவியருக்குக் கிடைத்தது.

2004ம் ஆண்டுப் பொதுத்தேர்தலில் ஓட்டாவா - கால்டன் தொகுதி எம்.பி. யாக முதலில் நாடாளுமன்றத்துக்கு தெரிவான பொலிவியர், தொடர்ந்து இருபது ஆண்டுகள் இத்தொகுதியின் எம்.பி. யாகவிருந்துவந்தார்.

இந்த வருடம் ஏப்ரல் மாதம் நடைபெற்ற பொதுத்தேர்தலில் எதிர்பாராத தோல்வி இவருக்கு கிடைத்தது. இவரை எதிர்த்து 90 பேர் இங்கு போட்டியிட்டனர்.

இந்த மாதம் 15ம் திகதி நாடாளுமன்றம் கூடும்போது மீண்டும் எம்.பி. யாக பதவியேற்பதுடன், நாடாளுமன்ற எதிர்க்கட்சித் தலைவராகவும் இயங்குவார். இடைத் தேர்தல் வெற்றியைத் தொடர்ந்து பொலிவியரின் மனைவி அனைடா தமது சமூக வலைத்தளத்தில், 'We are back. Politics is up and down. People do it because they believe in something" என்று குறிப்பிட்டிருந்தார்.

அடுத்தாண்டு ஜனவரியில் கன்சர்வேடிவ் கட்சியின் மாநாடு நடைபெறும்போது பொலிவியரையே மீண்டும் கட்சியின் தலைவராக தெரிவு செய்ய கட்சி உறுப்பினர்கள் பலரும் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

# நிரந்தர, தற்காலிக குடியேற்ற விண்ணப்பங்கள் நிராகரிப்பு வேகமாக அதிகரிப்பு!

கனடாவில் குடியேறுவதற்கென வெளிநாட்டவர் விண்ணப்பிக்கும் நிரந்தர மற்றும் தற்காலிக விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுவது முன்னெப்போதும் இல்லாதவாறு தற்போது அதிகரித்து வருகிறது. இதனை ‘ஆக்ரோஷமான’ அதிகரிப்பென குடிவரவுத்- துறை சட்டவாளர்கள் தெரிவிக்கின்றனர்.

அண்மைய கனடிய குடிவரவு கொள்கை மாற்றத்தின் விளைவாக கல்வி மற்றும் முதுகலை விண்ணப்பங்கள் அதிகளவு கிடைப்பதால் அவற்றை குறைப்பதற்கு மேலிட அழுத்தத்தின் காரணமாக ஒழுங்கற்ற முறையில் நிராகரிப்பு மேற்கொள்ளப்படுவதாக இத்துறைசார் நிபுணர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

2025, 2026, 2027ம் ஆண்டுகளில் குடியேற விரும்புபவர்களின் வருடாந்த இலக்கை கனடிய அரசு குறைத்துள்ளது. அதேசமயம் கனடிய குடிவரவு பணியாளர்களின் எண்ணிக்கையையும் மூவாயிரத்து முன்னூறால் வெட்டியுள்ளது. இவ்வருட யூன் 30ம் திகதிய நிலைவரப்படி 2,189,500 விண்ணப்பங்கள் குடிவரவு இலாகாவின் கணினிப் பதிவில் இருந்தன. ஆனால், மார்ச் மாதத்தில் இந்த எண்ணிக்கை 1,976,700 ஆகவே இருந்தது.

திடமான பெருந்தொகை விண்ணப்பங்கள் சரியான காரணமின்றி துாக்கி வீசப்படுவதாக குற்றஞ்சாட்டப்படுகிறது. இதனால் பலர் மீண்டும் மீண்டும் விண்ணப்பித்து பொருளாதார நெருக்கடியை சந்திக்கின்றனர். இந்த வருடத்தின் முதல் ஐந்து மாதங்களில் பொருளாதார, குடும்பங்கள் சார்ந்த மற்றும் மனிதாபிமான அடிப்படையிலான விண்ணப்பங்களே பெருமளவு பாதிக்கப்பட்டதாக கிடைக்கப்பெறும் தரவுகள் தெரிவிக்கின்றன.

## Immigration Applicants Face Rising Refusal Rates

Immigration applications in almost all permanent and temporary resident categories have seen higher refusals, according to the latest federal government data. The soaring rejection rates in some cases such as study and postgraduation work permits are primarily the result of changing eligibility and policies. But critics are raising concerns that this has also been driven by the pressure to render decisions quickly and haphazardly to reduce an immigration backlog.

Ottawa has reduced the annual intake of both permanent and temporary residents for 2025, 2026 and 2027, and cut 3,300 positions in the Immigration Department. But the number of people applying to come to Canada has not come down. As of June 30, there were 2,189,500 applications in process in the system — up from 1,976,700 in March — including 842,800 that have been in the queue longer than the department’s own service standards.

“They have set very aggressive targets for reducing both permanent and temporary immigration,” said Vancouver immigration lawyer Kyle Hyndman of the immigration cutbacks. “I don’t see how they can meet those targets in the short run without some pretty dramatic actions.” Critics say they are seeing more solid applications being tossed away.



எஸ்தி



றஞ்சி திரு

# சின்னச் சின்ன தகவல்கள்

கழிப்பறைக்குப் போகும்போது கைத்தொலைபேசியை எடுத்துச் செல்ல வேண்டாமென அமெரிக்க நோய்த்தடுப்பு மையம் பொதுமக்களுக்கு அறிவுறுத்தியிருக்கிறது. அதே கைத்தொலைபேசியை வெளியில் எடுத்துச் செல்லும்போதும், சாப்பாட்டு மேசைக்கும் மற்றும் பொது இடங்களிலும் எப்போதும் வைக்கிறீர்கள். எப்போதும் தொடுகிறீர்கள். கழிப்பறைக்குள் அதில் தொற்றிய கிருமிகள் உங்களுடன் சேர்ந்து பயணிக்கின்றன. அவை பல நோய்களை உங்களுக்கு மட்டுமன்றி மற்றவர்களுக்கும் பரவச் செய்கிறது என்கிறது இந்த மையம்.

எகிப்தின் தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் மிகவும் அரிதான 43 அடி நீளமுடைய பாப்பிரஸ் சுருளை கண்டுபிடித்துள்ளனர். 3,500 ஆண்டுகளுக்கு முன்னர் இறந்தவர்களின் கல்லறைகள், சிலைகள், மம்மிகள் உள்ளிட்ட பண்டைய எகிப்திய கலைப்பொருட்களின் செல்வமாக மதிக்கப்படும் இறந்தவர்களின் புத்தகம் இது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. மரணத்துக்குப் பின்னரான உடலங்களின் விபரத்தைக் குறிக்கும் கையெழுத்துப் பிரதி இந்தச் சுருள்.

ஒருவரது முடியிலிருந்து தயாரிக்கப்படும் பற்பசை ஏற்கனவே பாதிக்கப்பட்டுள்ள அவரது பற்களைச் சரி செய்கிறது என லண்டன் கிங்ஸ் கல்லூரியைச் சேர்ந்த விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர். தலைமுடி, தோல் மற்றும் கம்பளியில் காணப்படும் புரதமான கெரடினால் பற்களின் எனாமலை சரி செய்து பல் சொத்தையாவதை முன்கூட்டியே தடுக்கிறது. கெரடின் என்பது எச்சிலில் உள்ள தாதுக்களுடன் தொடர்பு கொள்ளும்போது இயற்கையான எனாமலின் செயற்பாட்டை ஒத்த பாதுகாப்புப் பூச்சை தயாரிக்கிறதாம்.

ஸ்பெயினில் 300 மீற்றர் உயரமுள்ள உலோகத்தினால் காளையின் சிலையை அமைக்க ஏற்பாடாகியுள்ளது. இந்தச் சிலை பாரிசிலுள்ள ஈபிள் கோபுரத்தைப்போல உயரமாகவும், எதிர்காலத்தில் நாட்டின் தேசிய அடையாளமாகவும் இருக்குமென அறிவிக்கப்பட்டுள்ளது. ஸ்பானிஷ் காளைச்சண்டை அக்கடமியின் இலட்சிய மற்றும் சர்ச்சைக்குரிய திட்டம் 'எல்டோரோ டி எஸ்பானா' (ஸ்பெயினின் காளை) என்று அழைக்கப்படுகிறது.

உலகின் மிகப்பெரிய பொருளாதார நாடாக 140 கோடி மக்கள் தொகையைக் கொண்ட சீனா இப்போது மக்கள் தொகையில் சரிவைக் கண்டு வருகிறது. இதனால் இந்நாட்டின் கம்யுனிஸ்ட் கட்சி ஆட்சி பத்தாண்டு களுக்கு முன்னர் அறிமுகம் செய்த 'ஒரு குழந்தைக் கொள்கை'யை கைவிட்டு பிறப்புவீத அதிகரிப்புக்கு ஊக்கமளிக்கிறது. இதன்படி மூன்று வயதுக்குட்பட்ட ஒவவொரு குழந்தைக்கும் ஆண்டொன்றுக்கு 3,600 யுவான் (இலங்கைப் பணத்தில் 1,50,000 ரூபா) வீதம் மூன்று வருடங்களுக்கு ஊக்குவிப்புத் தொகையாக வழங்கி வருகிறது.

எழுபது ரூபாவை அதிகூடிய விலையாக இலங்கை அரசாங்கம் அறிவித்த ஒரு போத்தல் குடிநீரை 200 ரூபாவுக்கு விற்பனை செய்த நிறுவனம் ஒன்றுக்கு ஐந்து லட்சம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டுள்ளது. கொழும்பு போர்ட் சிற்றியிலுள்ள வர்த்தக நிறுவனம் ஒன்றுக்கே கொழும்பு மேலதிக நீதிபதி சந்திராணி பத்திரானா இந்தத் தண்டனையை வழங்கினார். குடிநீர்ப் போத்தல் ஒன்றுக்கு வழங்கப்பட்ட அதிகூடிய தண்டனை இதுவென தெரிவிக்கப்பட்டுள்ளது.

# புடினின் கழிவுகள் தனியான சூட்கேசில் அமெரிக்காவிலிருந்து ரஷ்யாவுக்கு

ரஷ்ய ஜனாதிபதி புடின் அமெரிக்கா சென்று ஜனாதிபதி ட்ரம்புடன் சந்திப்பு நிகழ்த்திய பின்னர் அவர் ரஷ்யாவுக்கு கொண்டு சென்ற இரண்டு சூட்கேஸ்களைக் குறித்த ஒரு தகவல் வெளியாகியுள்ளது. அவற்றில் ஒன்று, அணு ஏவுகணைகளை ஏவுவதற்கான பொத்தான் இருக்கும் சூட்கேஸ். அமெரிக்க ஜனாதிபதியிடமும் அப்படி ஒரு சூட்கேஸ் உண்டு. அது Nuclear Football என அழைக்கப்படுகிறது.

புடினின் பாதுகாவலர்கள் இரண்டாவது சூட்கேஸ் ஒன்றை தங்களுடன் கொண்டு சென்றனர். அதில் அவரது கழிவுகள் (மலம், சலம், அவர் பாவித்த மருந்துகளின் வெற்றுப்புட்டிகள்) கொண்டு செல்லப்பட்டுள்ளன.

புடின் மற்ற நாடுகளுக்குச் செல்லும்போது, அந்த நாட்டிலுள்ளவர்கள் அவரது கழிவுகளை சேகரித்து, அதை ஆய்வுக்குட்படுத்தி, அவருக்கு என்ன உடல் உபாதைகள் உள்ளன என்பதை கண்டுபிடித்துவிடலாம் என்பதாலேயே, அவரது கழிவுகளை சேகரித்து, பத்திரமாக மீண்டும் ரஷ்யாவுக்கே கொண்டு சென்றுவிடுவார்களாம் அவரது பாதுகாவலர்கள்.

2017ம் ஆண்டு புடின் பிரான்ஸ் சென்றபோது இப்படி நடந்ததாக பிரான்ஸ் ஊடகவியலாளர்கள் இருவர் தெரிவித்துள்ளர்கள். அதேபோல, புடின் வியன்னா சென்றபோதும் இப்படி நடந்ததாக தெரிவிக்கும் முன்னாள் பிபிசி ஊடகவியலாளரான Farida Rustamova என்பவர், 1999ம் ஆண்டு புடின் ஆட்சிப் பொறுப்பேற்றதிலிருந்தே அவர் எந்த நாட்டுக்குச் சென்றாலும் அவரது கழிவுகள் சேகரிக்கப்பட்டு ரஷ்யாவுக்குக் கொண்டு செல்லப்படும் வழக்கம் துவங்கியதாகவும் தெரிவித்துள்ளார்.

**தமிழர் தகவலை முத்திரைக் கட்டணம் செலுத்தி மாதாந்தம் தபாலில் பெற**

**416 920 9250**

tamilsinfo@sympatico.ca



பேராசிரியர் அமுது ஜோசெப் சந்திரகாந்தன்


# மக்கியவெல்லியின் இரு முகங்கள்

சமீபத்தில் ஒக்ஸ்ஃபோர்ட் பல்கலைக்கழகத்தின் அரசியல்துறையின் முதுமாணி மாணவர்களின் கட்டாய வாசிப்புக்கான பத்து புத்தகங்களின் பட்டியலைப் பார்த்தபோது மக்கியவெல்லி (Machiavelli) எழுதிய இளவரசன் எனும் நூல் இரண்டாவது நூலாகப் பரிந்துரைக்கப்பட்டுள்ள - மையைப் பார்த்து ஆச்சரியப்பட்டேன்.

இத்தாலியின் புளோரன்ஸ் பெருநிலத்தில் அரசாங்க ஊழியனாகவும் அரசியல் கோட்பாட்டாளனாகவும் செயல்பட்ட நிக்கோலோ மக்கியவெல்லியின் இளவரசன் என்ற நூல் ஒருவகையில் அரசியல் ஆய்வு நூலாகவும் அக்கால அரசியல் வரலாற்றின் நிழல் படமாகவும் கொள்ளப்படுகிறது என்பது உண்மை.

அரசாங்க ஆட்சி முறைமைகள் என முதலில் பெயர் சூட்டப்பட்ட இந்த நூல் 1513 இல் எழுதப்பட்டது. ஆனால் மக்கியவெல்லி 1528ல் மரணம் அடைந்த பின்பு - ஐந்து ஆண்டுகள் தள்ளி 1532லேயே நூல் வெளியிடப்பட்டது.

## ஊரும் உலகும் – 42




இதற்கு முன்னதாக அவர் வெளியிட்ட பல நல்ல கருத்துகளைத் தாங்கிய படைப்பு - களை இந்த நூல் பிரதிநிதித்துவப்படுத்த வில்லை என்பது பொதுவான கருத்து. ஆனால் இளவரசன் எனும் இந்த நூல், ‘மக்கியவெல்லியன்’ என்ற பதத்தை உலக அளவில் நையாண்டியான ஒரு இழிசொல்-லாகப் பரவலாகப் பயன்படுத்துவதற்குக் காரணமானதென்பதே முக்கியமான வரலாற்று உண்மை.

மேற்கத்திய அரசியல் சிந்தனையின் பழைய போக்குகளிலிருந்து ஒரு பெரிய மடைமாற்றத்தை இளவரசர் எனும் இந்த நூல் சுட்டுகின்றது. மக்களின் அரசியல் நெறிமுறை மற்றும் பயனுள்ள கொள்கை-களைவிட உண்மையான கடந்த கால அனுபவங்களை இந்த நூல் அடிப்படை - யாகக் கொண்டது. மனித உள்இயல்பு மற்றும் அதிகார கட்டமைப்புகள் அனைத்தையும் விலாவாரியாக வெளிப் - படுத்துவதை நோக்கமாகக் கொண்டு மக்கியவெல்லி, அரசர்களின் கடந்த கால வன்செயல்களின் உண்மையான விளைவுகளை இதில் படம் பிடித்துள்ளார். எமாற்றுதல், கொடூரம், கொலை மற்றும் துரோகம் ஆகியவை அதிகாரத்தை அடைவதற்கும் அதனை தக்கவைத்துக் கொள்வதற்கும் வழிவகுத்ததால் அவை ஏற்றுக்கொள்ளத்தக்கவை என்று மிகவும் சர்ச்சைக்குரிய வகையில் இந்த நூலில் மக்கியவெல்லி வாதிடுகிறார். கத்தோலிக்க திருச்சபையால் மிகவும் வன்மையாக கண்டிக் - கப்பட்ட இந்தப் புத்தகம், புளோரன்டைன் ஆட்சியாளரான லோரென்சோ டி மெடிசிக்கு அர்ப்பணிக்கப்பட்டது என்பதும் அவரது அதிகாரத்தையும் அதிகார துஷ்பிரயோகத்தையும் தக்கவைக்க உதவும் நோக்குடனேயே இது எழுதப்பட்டது என்பதும் இக்கால விமர்சகர் பலரின் கருத்து.

ஓரளவேனும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இந்த நூலில் உள்ள மக்கியவெல்லியின் கருத்துகள் பல அரச தலைவர்களைப் பாதித்துள்ளது. உதாரணமாக, “மக்களின் ஆதரவில் அரசனாக ஆளும்  ஒருவர் மக்களின் நட்பையும் ஆதரவையும் பெற முயற்சி செய்ய வேண்டும். இது அவருக்கு எளிதானது. ஏனெனில் மக்கள் அடக்குமுறையைத் தவிர்ப்பதையே பொதுவாக விரும்புகிறார்கள். ஆனால், மக்களின் விருப்பத்திற்கு எதிராக, பிரபுக்களின் ஆதரவில் அரசனாகிய ஒருவர், மக்களை வெற்றி கொள்வதற்கு முதலில் முயற்சி செய்ய வேண்டும் அவர்களது பாதுகாப்பை உறுதி செய்தால் அது எளிதாக பயன் தரும்” என விளக்குகிறார்.

நியாயமான சட்டங்கள் அவசியம் என்றும், பொதுமக்களை துஷ்பிரயோகம் செய்தல் கூடாது என்றும் மக்கியவெல்லி விரிவாக விளக்குகிறார். எனவே, பல இழிசொல்லுக்கு உள்ளான அவர் ஓரளவு  யதார்த்தவாதியாக இருந்தார் என்றே எண்ணமுடியும்.

அதிகாரத்தைப் பிடித்து வைத்திருப்பது எப்படி என்பதிலும் நூல் கவனம் செலுத்துகிறது. மேலும், அரசியல் வாழ்க்கையை மேம்படுத்துவதில் எது நன்றாக வேலை செய்தது, எது பயனற்றது எனவும் பல ஆலோசனைகளை வழங்குகிறது.

இந்த நூல் மிகவும் நுட்பமானது. மன்னர்கள், அரச தலைவர்களின் எழுச்சி, வீழ்ச்சி, உயர்வு, தாழ்வு இன்னும் அரசுகளின் தொடர்ச்சியான இருப்பை உறுதிப்படுத்த அவர்கள் எடுக்கும் நீதியான அநீதியான நடவடிக்கைகளைப் பற்றி விவாதிக்கும் ஆசிரியர், நாடுகளில் மனித சமூகங்கள் உண்மையில் எவ்வாறு இயங்குகின்றன என்பதை விளக்குவதில்அதிக கவனம் செலுத்தி உள்ளார்.

உலக வரலாற்றில் அரசியல் மாற்றங்கள் பெரும்பாலும் வன்முறையுடன் நிகழ்ந்தன என்பதும் உண்மை என அவர் கூறுவதிலும் கருத்து வேறுபாடு இல்லை. இதன் காரணங்கள் யாது என்பதை அறிய வேண்டும், இதனால் அவர்கள் தோல்விகளைத் தவிர்த்து வெற்றிகளைப் பெறமுடியும் என்கிறார். முன்மாதிரியான பெருமனிதர்களைப் பின்பற்றுவதை ஓர் அரசன் முதன்மையாக செய்ய வேண்டும். சிறந்த ஆட்சியாளர்களின் வரலாறுகளை நிறையப் படிக்க வேண்டும் என அறிவுரை தருகிறார்.

வரலாற்றில் வெற்றிபெற்ற ஆண்களையும் பெண்களையும் ஆராய்ந்து, அவர்களின் வெற்றிகளுக்கும் தோல்விகளுக்குமான காரணங்களை அறிந்து அவர்களின் வெற்றிப்பாதைகளைப் பின்பற்ற வேண்டுமெனவும் அவர் விளக்குகிறார்.

சுருக்கமாக மக்கியவெல்லியின் அரசியல் கருத்தியல் “காலத்திற்கு ஏற்றவாறு தன் கொள்கையை மாற்றி அமைத்துக்கொள்ளும் அரசர் செழிப்படைவார். அதேபோல் காலத்தின் தேவைகளை மறுத்து அண்மைக் கால வரலாறுகளும் சுட்டுகின்றதன.

புத்திசாலித்தனமாக ஆட்சி செய்வதற்கு ஆட்சியில் உள்ள அரசன் வரலாற்றைப் படிக்க வேண்டும், அறிவார்ந்த மனிதர்களின் செயல்களைப் படித்து, அவர்கள் போரின்போது எவ்வாறு நடந்து கொண்டார்கள், அவர்களின் வெற்றிகளுக்கும் தோல்விகளுக்கும் முரண்படும் கொள்கையுடன் செயல்படும் ஆட்சியாளர் என்றுமே தோல்வியடைவார்” என்பதேயாம்.

# Record number of people applying to come to Canada to work, study or visit were refused in 2024

Ottawa refused a record number of would-be visitors, international students and foreign workers seeking to come to Canada last year.

According to data available, immigration officials rejected 2,359,157 or 50 per cent of temporary resident applications in 2024, up from 1,846,180 or 35 per cent the year before. The refusal rate — covering study permits, work permits and visitor visas — hit the highest level since 2019, before the pandemic.

Among the three subgroups, 1.95 million or 54 per cent of visitor visa applicants were denied last year — up from 40 per cent in 2023, along with 290,317 or 52 per cent of study permit applicants (up from 38 per cent), and 115,549 or 22 per cent of those who applied for authorization to work in Canada (down slightly from 23 per cent).




The federal government has set aggressive targets to rein in the number of temporary residents in the country under tremendous public pressure amid the affordable housing crisis and rising costs of living faced by Canadians post-pandemic. It also reduced the annual intake of new permanent residents by 20 per cent to 395,000 in 2025, 380,000 in 2026 and 365,000 in 2027.

To clamp down on the surging temporary resident population in the country, Ottawa has tried to limit new entries while banking on migrants already here to leave voluntarily after their legal permits expire, with a portion of them transitioning to permanent residence under eligible programs.

However, immigration data appears to show a different story when it comes to showing the door to migrants who are already here.

Migrants with expiring temporary resident status are eligible to extend their legal status by applying for what's called a visitor record. The document allows them to remain here legally but doesn't let them work or study.

Immigration Department data showed the number of visitor record applications received doubled from 196,965 in 2019 to 389,254 in 2024. The refusal rate hovered at around five per cent. Last year, extension was granted to 321,277 temporary residents — only down slightly from 333,672 in 2023.

"If you remain here and you cannot legalize yourself either as a student, a worker or a permanent resident, the fallback solution is a visitor record," said Ekaterina Neouimina, who speaks on behalf of the Canadian Immigration Lawyers Association as a founding member.

While she's not surprised by the jump in refusals of temporary immigration to Canada, she said it doesn't make sense that the visitor record approvals remained high.

A visitor record application now costs $100, and current processing time is 119 days.

Syed Hussan, executive director of the Migrant Workers for Change, said trying to get temporary residence to Canada has become "a toss-up" as there's only a 50 per cent chance that one is granted.

"So even though the total number of applicants is increasing, the rejection rate is going up much more significantly," he noted. "This is part of scapegoating migrants. This isn't about policy. It's politics … The government is not only rejecting migrants. It is profiting from their hopes and dreams."

Hussan said temporary resident application fees are non-refundable and average $150 per applicant. In 2024 alone, they generated an estimated $707.9 million in fees, including $354 million from refused applications.

(Courtesy: Toronto Star)

# அனைத்துலக எழுத்தறிவு நாள் செப்டம்பர் 8

# International Literacy Day September 8

அனைத்துலக எழுத்தறிவு நாள் உலகெங்கும் செப்டம்பர் 8ம் திகதி கொண்டாடப்பட்டு வருகிறது. இந்நாளை யுனெஸ்கோ நிறுவனம் நவம்பர் 17, 1965ல் உலக எழுத்தறிவு நாளாகப் பிரகடனம் செய்தது. எழுத்தறிவின் முக்கியத்துவத்தை தனிப்பட்ட மக்களுக்கும், சமூகத்துக்கும், அமைப்புக்களுக்கும் அறியவைப்பது இதன் முக்கிய நோக்கம்.

உலகில் சுமார் 781 மில்லியன் வயது வந்தோர் அடிப்படை எழுத்தறிவு அற்றவர்களாக இருக்கிறார்கள் என மதிப்பிடப் - பட்டுள்ளது. சுமார் 103 மில்லியன் சிறார்கள் பாடசாலை வசதிகளற்ற நிலையில் உள்ளார்கள். இதனால் இவர்கள் அடிப்படைக் கல்வியான எழுத, வாசிக்க, எண்ணத் தெரியா - தவர்களாக இருக்கிறார்கள்.

யுனெஸ்கோவின் 'அனைவருக்கும் கல்வி பற்றிய உலக அறிக்கை (2006)' யின்படி, தெற்கு மற்றும் மேற்கு ஆசியாப் பகுதிகளிலேயே மிகக் குறைந்த வீதமானோர் (வயது வந்தோரில்) (58.6%) படிப்பறிவில்லாமல் உள்ளனர். அதற்கு அடுத்தபடியாக உள்ள பகுதிகள் ஆபிரிக்கா (59.7%) அரபு நாடுகள் (62.7%). தனிப்பட்ட நாடுகளை எடுத்துக் கொண்டால் மிகக் குறைந்த எழுத்தறிவில்லாதோர் புர்கினா பாசோ (12.8%), நைஜர் (14.4%), மாலி (19%).

எழுத்தறிவு என்பது வாசித்-தல், எழுதுதல், எண்கணிதப் பயன்பாடு ஆகியவற்றின் தொகுப்பாகும். தற்காலத்தில் எழுத்தறிவு என்பது மொழிப் பயன்பாடு, எண்களின் பயன்பாடு, படங்கள், கணினிகள், மற்றும் புரிதலுக்கான அடிப்படைக் கருவிகளின் பயன், தகவல் பரிமாற்றம், பயனுள்ள அறிவைப் பெறுதல், கலாசாரத்தின் முதன்மைக் குறியீடுகளையும் அமைப்புகளையும் அறிந்து பயன்படுத்துதல் ஆகியவற்றை உட்படுத்தியதாகக் கருதப்படு - கிறது. பொருளியல், கூட்டுறவு மற்றும் வளர்ச்சிக்கான அமைப்பில் உள்ள நாடுகள் எழுத்தறிவுக் கருத்துகளை விரிவாக்கம் செய்துள்ளன. அதன்படி, நவீன தொழில்நுட்பம், சிக்கலான சூழல்கள் போன்றவற்றிலிருந்து அறிவைப் பெறுவதற்கான திறன்களை வளர்த்துக்கொள்வதே எழுத்தறிவு.

.எழுத்தறிவு வளர்ச்சியை உறுதிப்படுத்தும் முக்கிய காரணிகளில் ஒன்று வாசித்தல் ஆகும். இதன் மற்ற வளர்ச்சித் திறன் கூறுகள்:

பேசும் வார்த்தைகளை புரிந்து கொள்ளல், எழுதப்பட்டவற்றை குறி நீக்கி புரிந்து கொள்ளல், உரைகளைப் படித்து உள்ளார் - ந்து புரிந்துகொண்டு உச்ச அளவு பயன்பாடு பெறுதல், வாசித்தலில் உள்ள வளர்ச்சிகள் பின்வரும் இலக்கிய மொழியியல் கூறுகளை உள்ளடக்கியதாகும்:

பேச்சில் உள்ள ஒலிக்குறிகள் குறித்த விழிப்புணர்வு (ஒலியனியல்), எழுத்துக்கோர்வை வடிவவிதம் (orthography), வார்த்தைகளுக்கான பொருளறிதல் (சொற்பொருளியல்), இலக்கணம் (சொற்றொடரியல்)

வார்த்தை உருவாதலில் வடிவவிதம் (உருபனியல்) இவை அனைத்தும் தடையற்ற ஆற்றொழுக்கு வாசித்தலுக்கும் புரிதலுக்கும் தேவையான அடிப்படை கூறுகளாகும்.

இத்திறன்களைப் பெற்றவர், அச்சிடப்பட்ட கருத்துகளைப் புரிந்து, நுண்ணாய்வு செய்து பயன் பெறுதல், தொகுத்தல், உய்த்து - ணர்தல், கோர்வையாகவும், துல்லியமாகவும் எழுதுதல், அச்சிடப்பட்ட கருத்துகளிலிருந்து பெற்ற தகவல்களைப் பயன் - படுத்தி உட்காட்சி அமைத்தல், முடிவெடுத்தல், படைப்புத்திற ஆதார சிந்தனைகளை மேற்கொள்ளல் போன்ற பன்முகத் திறன்களையும் பெற்றவராவர். இவர்களே முழு எழுத்தறிவு பெற்றவராவர்.

எழுத்தறிவு என்பது அச்சிடப்பட்ட அல்லது எழுதப்பட்ட கருத்துகளைக் குறிப்பிட்டுள்ள கருத்துடன் பொருந்தி இனம் காணல், புரிதல், விளக்குதல், புதியன புனைதல், தகவல் பரிமாற்றம் செய்தல், கணித்தல் ஆகியவற்றின் தொகுப்பாகும். இது தொடர்கற்றல் நிகழ்வு.

சமூக மானிடவியலர் ஜாக் கூடி (Jack Goody) என்பவர் எழுத்துக்களின் தோற்றம் குறித்த இரண்டு கருத்துகளை முன்வைக்கிறார். வரலாற்று ஆசிரியர் இக்னேஸ் கெல்ப் (Ignace Gelb) என்னும் அறிஞரின் கூற்றுப்படி கிமு 750ல் பண்டைய கிரேக்கர்கள் முதல் எழுத்துருவை உண்டாக்கினர். இவர்கள் உயிரெழுத்துகளுக்கும் மெய்யெழுத்துகளுக்கும் குறிப்பிடத்தக்க குறியீடுகளைப் பயன்படுத்தி - யதாகத் தெரிவிக்கிறார். ஆனால் Goody கூற்றுப்படி மேற்கு ஆசியாவிலிருந்து பெறப்பட்ட மெய்யெழுத்துகளுக்கு உரிய வடிவங்கள் கிரேக்க உயிரெழுத்துகளுடன் சேர்க்கப்பட்டன. ஆனால் கிரேக்க கலாசாரத்தைத் தொடர்ந்து வந்த மேற்கு ஐரோப்பிய வரலாற்றில் அடிப்படைவாதிகள் கிரேக்கர்கள்தான் முதலில் எழுத்துருக்களை உண்டாக்கினர் என்ற கருத்தை திணித்தனர். இவ்வாறு பல அறிஞர்கள் மற்றும் முன்னாள் எழுத்துருவாக்கவியலார் கூற்றுப்படி கிமு 1500ல் வடக்கு கானான் (தற்போதைய சிரியா) பகுதியில் மெய்யெழுத்துகளுக்கு வடிவம் கொடுக்கப்பட்டிருந்தது.

1905ல் ஆங்கில தொல்லியலார் ஃப்லிண்டர்ஸ் பெட்ரி (Flinders Petrie) என்பார் செராபித் எல் காதெம் (Serabit el-Khadem) எனும் இடத்திலுள்ள பச்சை கலந்த நீல நிற சுரங்கங்களில் கானான் எழுத்து முறை சார்ந்து மேற்கொள்ளப்பட்ட ஆய்வு இக்கொள்கைகளுக்கு ஆதாரமாக அமைந்தது. பத்து ஆண்டுகளுக்குப்பின் ஆலன் கார்டினர் (Alan Gardiner) எனும் ஆங்கில எகிப்தியியலார் கானானில் கிடைத்த கல்வெட்டு எழுத்துகள் அங்குள்ள அஷேரா (Asherah) எனும் தேவதையைக் குறிப்பதாகக் கூறியுள்ளார்.

1948ல், வில்லியம் எஃப் ஆல்பிரைட் (William F. Albright) என்பவர், கூறிய கருத்துகளை ஒட்டிய கல்வெட்டு ஆதாரங் - களை அடையாளம் கண்டுணர்ந்து வெளிப்படுத்தினார். 1929ல் உகாண்ட் பகுதியில் பிரான்சு நாட்டு தொல்லியலார் கிளாடு எஃப்.ஏ. ஸ்சேஃபர் (Claude F. A. Schaeffer) என்பவர் கல்வெட்டு எழுத்துகள் தொடர்ச்சியாகக் கிடைப்பதை உறுதி செய்தார்.



கவல்கணன் - ஆஸ்திரேலியா

# காலத்தை வென்ற ஒரு கப்பல் கற்பனையா? காவியமா?

சமூக ஊடகம் வழியாக எனக்கு வந்த ஒரு சுவையான செய்தியை ஆசிரியர் திரு அவர்களுடன் அண்மையில் பகிர்ந்து கொண்டேன். றஞ்சி அக்காவின் ‘சின்னச் சின்ன தகவல்கள்’ பக்கத்திற்குப் பயன்படலாம் என்பது எனது சிந்தனை. ஆனால் அவரோ, “அந்தப் பக்கத்திற்குச் சொந்தக்காரர் அவர், அதில் நான் தலையிட மாட்டேன், நீங்களே ஒரு கட்டுரையாக எழுதிக் கொடுங்கள்” என்று கூறியதன் விளைவுதான் இந்தக் கட்டுரை.

நான் படித்த செய்தி இதுதான். “காலத்தை வென்ற ஒரு கப்பல்” என்ற தலைப்பில், ஒரே நேரத்தில் இரண்டு நூற்றாண்டுகள், இரண்டு பருவ காலங்கள், இரண்டு வெவ்வேறு திகதிகள் மற்றும் இரண்டு அரைக்கோளங்களில் இருந்த ஒரே கப்பல் - SS Warrimoo என்று பகிரப்பட்டிருந்தது. எஸ்எஸ் வாரிமூ என்ற கப்பலின் கதை, கடற் பயணங்களின் மாயங்கள், காலத்தின் நெளிவு மற்றும் மனிதனின் கணித அறிவு என்பவற்றை நாம் வியந்து பார்க்க வைக்கிறது. இது உண்மையாக இருந்தாலும் சரி, அல்லது ஒரு கடல் கட்டுக் கதையாக இருந்தாலும் சரி, வரலாற்றில் மிக அற்புதமான நிகழ்வுகளில் இதுவும் ஒன்றாகும்.



பசிபிக் பெருங்கடலின் ஆழமான கடும் நீல நிற நீரில், 1899ம் ஆண்டு டிசம்பர் மாதம் 31ம் திகதி, நள்ளிரவுக்கு சற்று முன்பு, New Zealand Shipping Co என்ற நிறுவனம் உரிமை கொண்ட ஒரு பிரிட்டிஷ் கப்பல் எஸ்எஸ் வாரிமூ அதன் பயணத்தை முடிக்கும் தருணத்தில் இருந்தது. ஆனால், அன்றிரவு நடந்த ஒரு அசாதாரண நிகழ்வு, இந்த கப்பலை வரலாற்றில் ஒரு கால மற்றும் இடத்தின் மாயக் கப்பலாக மாற்றியது!

எஸ்எஸ் வாரிமூ நீராவியால் இயக்கப்பட்ட ஒரு கப்பல், ஆஸ்திரேலியா மற்றும் கனடா இடையேயான பயணிகள் மற்றும் சரக்கு போக்குவரத்துக்குப் பயன்படுத்தப்பட்டது. 1899ம் ஆண்டு டிசம்பர் மாதம் இந்தக் கப்பல் கனடாவின் வன்கூவர் துறைமுகத்திலிருந்து ஆஸ்திரேலியா நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்தது. அதன் முதன்மை மாலுமி Captain John D. Phillips அனுபவம் வாய்ந்த கடல் வழிகாட்டி. அதன் பாதையைக் கணக்கிட்டுக் கொண்டிருந்தபோது அன்று வருடத்தின் கடைசி நாள் என்பதை உணர்ந்தார். கப்பல் பயணித்துக் கொண்டிருந்த இடத்துடன் ஒப்பிடுகையில், உலகின் நேர மண்டலங்கள் (Time Zones) மற்றும் பன்னாட்டு திகதிக் கோடு (International Date Line) இரண்டையும் அவதானித்த அவருக்கு ஒரு பொறி தட்டியது.

சரியாக இரண்டு முக்கியமான கோடுகளை எஸ்எஸ் வாரிமூ ஒரே நேரத்தில் கடக்கும் நிலையில் இருந்தது - பன்னாட்டு திகதிக் கோடு (International Date Line) _ இதைக் கடந்தால், திகதி ஒரு நாள் முன்னோ பின்னோ மாறும். அடுத்தது நில நடுக்கோடு (புவிமையக் கோடு அல்லது பூமத்தியரேகை ஆங்கிலத்தில், Equator) _ இது பூமியை வடக்கு மற்றும் தெற்கு அரைக்கோளங்களாகப் பிரிக்கிறது. கப்பல் இரண்டு கோடுகளையும் அண்மிக்கிறது. என்ன செய்தார்? சரியான நேரத்தில் கப்பலை நிறுத்தச் சொல்லி நங்கூரத்தை இறக்க வைத்தார் அவர். ஐந்து அனுபவம் வாய்ந்த மாலுமிகள் நட்சத்திரங்களின் நிலைகளைச் சரி பார்த்தனர். கப்பலின் நிலை ஒவ்வொரு மூன்று மணி நேரத்திற்கும் சரி பார்க்கப் - பட்டது. மென்மையான கடல் மற்றும் திறந்த வானத்தின் உதவியுடன், நள்ளிரவு நேரம் எஸ்எஸ் வாரிமூ மேற்கூறிய சந்திப்பின் குறுக்கே நிறுத்தப்பட்டது.

அந்தத் தருணத்தில்:

கப்பலின் முன் பகுதி 1900ம் ஆண்டு (புதிய நூற்றாண்டு) ஜனவரி 1 என்ற திகதியில் இருந்தது.

கப்பலின் பின் பகுதி 1899ம் ஆண்டு (பழைய நூற்றாண்டு) டிசம்பர் 31 என்ற திகதியில் இருந்தது.

கப்பலின் வடக்குப் பகுதி குளிர் காலத்திலும், தெற்குப் பகுதி கோடை காலத்திலும் இருந்தது.

இந்தக் கதை Vancouver நகரிலிருந்து பிரசுரமான The Province என்ற பத்திரிகையில் 1942ம் ஆண்டு மே மாதம் 4ம் நாள் Ronald Kenvyn என்பவரால் வெளியிடப்பட்டது. இந்த நிகழ்வு கடல் கணிதவியல் (Nutical Mathematics) மற்றும் நேர மண்டலங்களின் (Time Zones) ஒரு அரிய சந்தர்ப்பம். கடல் நேரக் கணக்கீடுகளின் அடிப்படையில் சாத்தியம், ஆனால், உண்மையில் நடந்ததா என்பது இன்னும் விவாதத்திற்கு உரியது.

கடைசி வசனத்தை எழுதும்போது எனக்கு ஒரு நிகழ்வு ஞாபகத்திற்கு வந்தது.




( 32ம் பக்கம் வருக )



கனகேஸ்வரி நடராஜா

# கோடைகால ஒன்றுகூடல்களும் எமது பாரம்பரிய உணவுகளும்!

கோடைகாலம் என்றால் எல்லோர் மனதிலும் உற்சாகமும் உடலில் புத்துணர்ச்சியும் ஏற்படும். நீண்ட பகல் பொழுது, நல்ல சூரிய வெளிச்சம் எல்லாவற்றையும் அனுபவிப்பதற்கு வாய்ப்பாகி விடும். இதனைத் தவறவிட்டால் அடுத்த வருட கோடைகாலம் வரையும் காத்திருக்க வேண்டும். முதியோர் மன்றங்கள், ஊர்ச் சங்கங்கள், பாடசாலை மாணவர் அமைப்புகள் மட்டுமன்றி தனிப்பட்ட நண்பர்கள் குழுக்கள், சொந்தபந்தங்களின் குழுக்கள் என்று சில மாதங்களுக்கு முன்னரே கோடையில் எப்படி ஒன்றுகூடல் நடத்தலாமென திட்டமிட தொடங்கி விடுவார்கள்.

அனேகமான ஒன்றுகூடல்கள் பொதுப்பூங்காக்களில் நடைபெறுகின்றன. மேசை, வாங்குகள், கொட்டகைகள், மலசலகூட வசதிகள், தண்ணீர் வசதிகள், வாகன தரிப்பிட வசதிகள் அனைத்தும் இந்தப் பூங்காக்களில் ஒருங்கே அமைந்துள்ளன. இவைகளை உபயோகிப்பதற்கு பதிவு செய்து அனுமதி பெற வேண்டும். இந்தப் பூங்காக்களிலேயே சமையலும் செய்ய முடியும். எவரது தலையீடும் இருக்காது. வாழ்க்கையில் விரும்பியதை அனுபவிப்பதுடன் பாரம்பரிய உணவுகளை சுடச்சுட சாப்பிட்டு மகிழலாம்.

ரொறன்ரோவில் தமிழர் மத்தியில் சுமார் பத்துக்கு மேற்பட்ட முதியோர் சங்கங்கள் உள்ளன. ஒவ்வொரு சங்கத்திலும் சராசரியாக நூறுக்கு மேற்பட்டவர்கள் அங்கத்தவர்களாக உள்ளனர். சில முதியோர் பல சங்கங்களில் அங்கம் வகிக்கின்றனர். இதனால் எல்லா நிகழ்வுகளிலும் பெருமளவானோர் பங்குபற்றுகின்றனர். வலு அற்றவர்களுக்கு அரசாங்கத்தின் வாகன வசதி கிடைக்கிறது. இதனால் எவரது தயவையும் நாட வேண்டியதில்லை. முதியோர் சங்கங்கள் நடத்தும் ஒன்றுகூடல்கள் எல்லாவற்றிலும் எமது பாரம்பரிய உணவான கூழ் முக்கிய இடம் வகிக்கிறது. இதனால் இந்த ஒன்றுகூடல்கள் 'கூழ் கூடல்' என்று அழைக்கப்படுகிறது. மரக்கறி கூழ் தனியாகவும், மாமிசக்கூழ் (மீன், நண்டு, இறால்) தனியாகவும் காய்ச்சப்படுகிறது. மாமிசக் கூழுக்குத்தான் மவுசு அதிகம்.

கூழ் காய்ச்சுவதை அங்கத்தவர்கள் தாமாகவே செய்கின்றனர். ஆண்களும் பெண்களும் ஆர்வத்தோடு கூட்டாக கூழுக்குத் தேவையான உணவு வகைகளை வெட்டுவதும், பெரிய பாத்திரங்களில் கூழைக் காய்ச்சுவதும், உப்பு புளி காரம் சரியாக இருக்கிறதா என ருசி பார்ப்பதுமாக பூங்காக்கள் கலகலப்பாக இருந்த காலம் இப்போதில்லை. இன்று ஆரவாரமோ அலுப்போ இல்லாமல் வாயு அடுப்புகளை எடுத்து வந்து இதற்கான சமையல் செய்பவர்களிடம் அந்தப் பொறுப்பு ஒப்படைக்கப்படுகிறது. அவர்கள் கூழ் காய்ச்சுவதோடு நிறுத்தாது அதனை சீராக பரிமாறும் பொறுப்பையும் செய்கிறார்கள். ஆனால், ஊர்ச் சங்கங்களில் இன்றும் அங்கத்தவர்களே கூழ் காய்ச்சும் வேலையைச் செய்கிறார்கள்.

கூழ் எப்போதும் பலரோடு சேர்ந்து குடிக்கும்போதுதான் சுவையாக இருக்கும். தாயகத்தில் நம் வீட்டில் கூழ் காய்ச்சும்போது அயலவர்கள் இனத்தவர்களையும் அழைத்து ஒன்றாகக் குடிப்பது வழக்கம். நூற்றுக்கணக்கானோர் ஒரே இடத்தில் கூடி கூழ் குடிக்கும் காட்சியை கனடாவில்தான் காண முடியும்.

றோஸ் பாண் என்பது தமிழ்ச் சாப்பாட்டுக் கடைகளில் மாத்திரம் காணப்படுகிறது. தாயகத்தில் நாட்டு பேக்கரிகளில் மட்டுமே இதனைத் தயாரிக்கின்றனர். எமது ஒன்றுகூடல்களுக்கு கட்டுக் கட்டாக பாணை தருவிக்கிறார்கள். அதற்கு இணைவாக ருசியான சம்பல், பருப்பு, உருளைக் கிழங்கு கறிகள் என்பவற்றை அங்கத்தவர்களே வீடுகளில் தயாரித்து எடுத்து வருகிறார்கள். சமைப்பதற்கு வசதியில்லாதவர்கள் அவைகளை உணவகங்களில் ஓடர்கள் கொடுத்து எடுத்து வருகிறார்கள். பலருடன் சேர்ந்து சாப்பிடும்போது ஒரு முழுப்பாணையே சாப்பிட முடிகிறது.

சில ஒன்றுகூடல்களில் அவித்த மரவள்ளிக் கிழங்கு, சாம்பாருடன் வெண்பொங்கல் என்பனவும் வழங்கப்படுகிறது. எல்லோரும் ஆசையோடு சாப்பிடுகிறார்கள். இந்த உணவு வகைகளுக்கு இலங்கையில் இப்படியொரு மோகம் இருந்ததில்லை. சில விற்பன்னர்கள் தோசை, அப்பம் போன்றவற்றை சுடச்சுட கொண்டு வருகிறார்கள். இப்போதெல்லாம் முட்டை அப்பம், பால் அப்பம், வெள்ளை அப்பம் என்பவற்றை வரிசையில் நின்று பொறுமையாக கேட்டு வாங்கி சாப்பிடும் பழக்கம் எம்மவரிடையே வந்துவிட்டது. இவைகள் சூடாகப் பரிமாறப்படுவதால் இதனைத் தவறவிட எவரும் விரும்புவதில்லை.

இப்பொழுது மாம்பழக் காலம். மாம்பழத்தை விரும்பாத தமிழர் யார் இருக்கிறார். தமிழ் வர்த்தக நிலையங்களிலும், நாற்சந்திகளிலும் பெட்டி பெட்டியாக மாம்பழம் கிடைக்கிறது. சிலர் ஒன்றுகூடல்களுக்கு இதனையும் கொண்டு வருகிறார்கள். ஆட்பலத்துக்குத்தான் குறைவில்லையே. அவற்றை சுத்தம் செய்து துண்டுதுண்டாக வெட்டி தட்டுகளில் அடுக்குகிறார்கள். நீரிழிவு நோய் உள்ளவர்கள்கூட "ஒரு நாளைக்குத்தானே, பரவாயில்லை" என்று சொல்லிவிட்டு அதனைச் சாப்பிடுகிறார்கள்.

இவ்வகையான ஒன்றுகூடல்கள் பெரும்பாலும் முதலாம் தலைமுறையினரால்தான் நடத்தப்படுகின்றன. தாங்கள் சாப்பிட்டு வளர்ந்த பாரம்பரிய உணவுகளை மீண்டும் அனுபவித்து இவர்கள் மகிழ்கிறார்கள்.

எதிர்வரும் காலங்களில் எமது அடுத்தடுத்த தலைமுறையினர் இத்தகைய ஒன்றுகூடல்களை நடத்துவார்களா, நடத்தினாலும் இங்கு பாரம்பரிய உணவுகள் வழங்கப்படுமா என்பதற்கு எவரிடமும் பதில் இல்லை.



இரா. சம்பந்தன்

# காசினை வென்ற காதல்!

சங்ககால மக்கள் கண்ட ஐந்துவகை நிலங்களிலும் பாலை நிலமே மிகவும் கொடுமையானது. காடும் காடு சார்ந்த குடியிருப்புகளை உள்ளடக்கிய குறிஞ்சி நிலமும் மலையும் மலைவாழ் மக்கள் வாழ்விடங்களைக் கொண்ட முல்லை நிலமும் தங்கள் செழிப்பை இழந்து பாழடைந்து அங்கு வாழும் மக்களுக்கு மிகுந்த துன்பததைக் கொடுக்கும் பூமியாக மாறுவதே பாலை நிலம் என்றது சிலப்பதிகாரம்.

முல்லையும் குறிஞ்சியும் முறைமையில் திரிந்து
நல்பியல்பு இழந்து நடுங்கு துயர் உருத்துப்
பாலை என்பதோர் படிவம் கொள்ளும்

அங்கே கனிதரும் மரங்கள் வளரமாட்டா. இனிய குரலையுடைய பறவைகள் வாழமாட்டா. தாகத்தினால் நீர்தேடி அலையும் கொடிய விலங்குகளே எங்கும் அவலக் குரல் எழுப்பும். அப்படியிருந்தும் அங்கே மக்களும் வாழத்தான் செய்தார்கள். அவர்கள் பெரும்பாலும் ஏழ்மை நியைிலே இருந்து கொண்டு பொருள் தேடும் வழியைச் சிந்திப்பார்கள்.

அந்த இளைஞனும் அப்படித்தான் எண்ணினான். கடல் கடந்து வெளியூர் சென்றால் பொருள்தேடி வரலாம். நண்பர்கள் பலர் அவ்வாறு பொருள் ஈட்டி வந்து சந்தோசமாக வாழ்வதை அவன் கண்டிருக்கின்றான். அவனுக்கு வீட்டிலே அன்புக்குரிய மனைவி இருந்தாள். பெற்றவர்கள் இருந்தார்கள் அயலிலே. உறவினர்கள் இருந்தார்கள்.

பணத்தின் தேவையை அனைவருக்கும் எடுத்துச் சொல்லி சிலகாலம் அவன் வெளியூர் சென்று வர ஏற்பாடாகியது. அவன் செல்ல வேண்டிய நாளும் வந்தது. இரவு முழுவதும் அவன் தூங்கவில்லை. அவன் மனத்தில் பல்வேறு எண்ணங்கள்.

கட்டியவளைப் பிரிந்து சென்றால் பொருள் கிடைக்கும். ஆனால் இளவயது மனைவியின் சுகங்கள் கிடைக்காமல் போய்விடும். மனைவியின் தேக சுகத்துக்கு ஆசைப்பட்டால் வாழ்நாள் முழுவதும் ஏழையாகவே வாழ நேரிடும். அவனுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை.

பாயிலே உறங்கிக் கொண்டிருந்த மனைவியை மெதுவாக எழுப்பினான். அவளும் எழுந்து இருந்தாள். விளக்கு வெளிச்சத்திலே அவள் கண்களைப் பார்த்தான். மறுகணமே அவள் கைகளைப் பற்றிக் கொண்டு சொன்னான்.

வாடாத மலர்களை உடைய பொய்கையிலே மீனானது தண்ணீரைக் கிழித்துக் கொண்டு நீந்திச் செல்ல பின்னால் அது வந்த சுவடே தெரியாமல் நீர் ஒன்றுபட்டுவிடும். பொருளும் அப்படித்தான் நிலையற்றதாக இருக்கின்றது. இந்த உலகத்தையே நெல் அளக்கும் கொத்தாகக் கொண்டு ஏழு முறை அளந்து கொட்டக்கூடிய செல்வத்தை நான் அடைந்தாலும் அது உன் கண்களுக்கு ஈடாகாது. எங்களுக்குப் பொருள் வேண்டாம். அதுக்கு ஆசைப்படுபவர்கள் அதைத் தேடித் தங்களோடு வைத்துக் கொள்ளட்டும்.

உன் கண்களையே பார்த்துக் கொண்டு உன் அருகே இருந்துவிடுகின்றேன் என்றான் அவன். காதலுக்காக பொருளை வெறுத்த இந்தச் செய்தியை சங்க இலக்கியமான நற்றிணை 16வது பாடலாக எடுத்துப் பேசுகின்றது. சிறைக்குடி ஆந்தையார் என்னும் புலவன் பாடியிருக்கின்றான்.

புணரின் புணராது பொருளே, பொருள்வயின்
பிரியின் புணராது புணர்வே, ஆயிடைச்
செல்லினும், செல்லாய் ஆயினும், நல்லதற்கு
உரியை வாழி என் நெஞ்சே! பொருளே
வாடாப் பூவின் பொய்கை நாப்பண்
ஓடு மீன் வழியின் கெடுவ் யானே
விழுநீர் வியல் அகம் தூணி ஆக
எழு மாண் அளக்கும் விழுநிதி பெறினும்,
கனங்குழைக்கு அமர்த்த சேயரி மழைக் கண்
அமர்ந்து, இனிது நோக்கமொடு செகுத்தன
எனைய ஆகுக! வாழிய பொருளே!

புணரின் புணராது பொருளே _ நாம் தலைவியுடன் இருந்தால் பொருளை அடைய முடியாது.

பொருள்வயின் பிரியின் புணராது புணர்வே _ பொருளுக்காக நாம் பிரிந்தால் தலைவியுடன் இணைய முடியாது.

ஆயிடைச் செல்லினும் செல்லாய் ஆயினும் _ அதனால் சென்றாலும் செல்லா விட்டாலும்.

நல்லதற்கு உரியை _ நல்லது செய்வதற்கு உரியை நீ.

வாழி _ நீ நீடு வாழ்வாயாக.

என் நெஞ்சே _ என்னுடைய நெஞ்சே.

பொருளே _ பொருளானது.

வாடாப் பூவின் பொய்கை நாப்பண் _ வாடாத மலர்களையுடைய பொய்கையின் நடுவில்.

ஓடு மீன் வழியின் கெடுவ _ ஓடும் மீன் செல்லும் வழி கெடும்.

யானே _ நானே.

விழுநீர் வியல் அகம் _ பெரிய கடல் சூழ்ந்த உலகம்.

தூணி ஆக _ மரக்கால் ஆக.

எழு _ ஏழு முறை.

மாண் அளக்கும் _ பெரும் மாட்சி பெற்ற அளவு.

விழுநிதி பெறினும் _ பெருஞ்செல்வத்தை நான் அடைந்தாலும்.

கனங்குழைக்கு _ கனமான காதணி அணிந்த தலைவிக்கு.

அமர்த்த _ மாறுபட்ட.

சேயரி _ சிவந்த வரிகள்.

மழைக் கண் _ குளிர்ச்சியுடைய கண்கள்.

இனிது நோக்கமொடு செகுத்தன _ இனிதாக நோக்கும் நோக்கத்தால அழித்தன.

எனைய ஆகுக _ என்னவானாலும் ஆகட்டும்.

வாழிய பொருளே _ போற்றுவாரிடத்து வாழட்டும்.



மருத்துவர் போல் ஜோசேப்

# உடல் மொழி - பகுதி - 4

## வாந்தியை வணங்குவோம்

ஒருவரின் மரணத்தையே தள்ளிப்போடும் வல்லமை கொண்டதுதான் வாந்தி என்றால் நீங்கள் நம்பமாட்டீர்கள். கடந்தசில கட்டுரைகளில் உடல்மொழி - அதாவது உடல் நம்மோடு பேசும் கலையான, பல்வேறு நோய் அறிகுறிகளை பார்த்து வருகிறோம். தொடர்ச்சியை புரிந்துகொள்ள முந்தைய கட்டுரைகளை மீண்டும் படித்துப்பாருங்கள். வாந்தி அல்லது சத்தி என்பது ஒரு நோயல்ல. மாறாக உடல் பாதிப்பின் அறிகுறியாக வெளிப்படும் ஒரு பாதுகாப்பு பொறிமுறையாகும். பெரும்பாலும் எல்லோரும் சில முறையாவது அனுபவித்து இருப்போம்.

வாந்தி என்றதும் பலருக்கும் நினைவுக்கு வருவது குடிகாரர்களின் பிதற்றலும் தள்ளாட்டமும் அதன்பின் அருகில் இருக்கும் அத்தனை பேரையும் ஒருகணம் முகம்சுளிக்க வைக்கும் வாய்வழியே வந்து விழும் அந்த ‘ஒரு நொடி குட்டி நயாகரா’ வீழ்ச்சியும்தான். அந்த வாந்தி மட்டும் வரவில்லை என்றால் அடுத்த சில நொடிப் பொழுதுகளில் அவர் மரணித்திருக்க வாய்ப்புள்ளது என்பது பலருக்கும் தெரியாத ஒரு மருத்துவ அதிசயம்.

உடலானது தன்னை பாதுகாத்துக் கொள்ள பல பொறிமுறைகளை தன்னகத்தே கொண்டுள்ளது. தேவையற்ற நச்சுத்தன்மையுள்ள உணவு மற்றும் பொருட்கள், கிருமிகளையும் உடலில் வெளியேறாத கழிவுகளையும் வெளியேற்றும் ஒரு பொறிமுறை மட்டுமன்றி உடலுக்குள்ளே உண்டாகும் பல்வேறு தீங்கு விளைவிக்கும் செயல்பாடுகளையும் பல நோய்களையும் காட்டிக்கொடுத்துவிடும் உயிர் காக்கும் பாதுகாப்பு செயற்பாடுதான் வாந்தி. எனவே வாந்தியைப் பார்த்து அருவருக்காமல் வணக்கம் செலுத்துவோம்.

வாந்தி என்பது ஏதோ வயித்துக்குள்ளே இருப்பது வாய் வழியே வெளியேறும் நிகழ்வு அல்ல. மூளைக்கு அடியில் தண்டுவடம் தொடங்கும் இடத்தில் உள்ள Medulla Oblongata எனும் முகுளம் என்று ஒரு உறுப்பு உள்ளது. அதனருகில் Postrema என்ற இரண்டு மில்லி மீட்டர் அளவிலான ஒரு குட்டி உளவாளி இருக்கிறார். இவருக்குள் இருக்கும் பொறிமுறை என்னவென்றால் Chemoreceptor trigger system என்ற இரசாயன ஏற்பி தூண்டு மண்டலமானது, எமது இரத்தச் சுற்றோட்டத்தில் உள்ள உடலுக்கு ஊறு விளைவிக்கும் எந்தப் பொருளாக இருந்தாலும் - குறிப்பாக நச்சுத்தன்மையுள்ள இரசாயனங்கள், கிருமிகளின் வெளிப்பாடுகளான நச்சுப்புரதங்கள், அல்லது நோய்களின் போது உடல் கலங்களிலிருந்து வெளியேறும் தேவையற்ற மூலக்கூறுகள் பலவற்றை உளவு பார்த்து இனம்கண்டு அவை மேலும் உடலை பாதிப்பதற்கு முன்பே உடல் குறியாக, உடல் மொழியாக வெளிப்படுத்தும் பாரிய பணியைச் செய்கிறது. அதன் பணிகளில் ஒன்றுதான் வாந்தி எனும் வழிமுறை.

வாந்தி எனும் செயல்முறைக்கு மேற்குறிப்பிட்ட உளவுத்துறையின் கட்டுப்பாட்டில் உடல் இயக்கம் அத்தனையும் கொண்டுவரப்படும். அதனோடு தொடர்புடைய எட்டாவது கிரேனியல் நரம்பு vestibular மற்றும் பத்தாவது கிரேனியல் நரம்பு Vagus system போன்றவற்றின் துணையோடு வாந்தி எடுப்பதற்கான முன்னேற்பாடுகள் மூளையோடு சில நொடிகள் அவசர ஆலோசனைகள் நடைபெற்று, உமிழ்நீர் ஊற்றெடுத்து பின்னர் குடலில் நீர்த்தேக்கமும், அமிலம் மற்றும் பித்தம் என்பன சுரந்து தயார் நிலையில் இருக்கும்.

வேகஸ் நரம்பின் கட்டுப்பாட்டில் சிறுநீர்ப்பாதை, மலவாசல் என்பன அடைக்கப்பட்டு வயிற்றில் ஒருவிதமான அழுத்தம் அதிகரிக்கும் செயல்முறை நடைபெறும். வயிற்றுத் தசைகள், மார்புத் தசைகள் ஒரு சேர சுருங்கியவுடன் தொண்டையில் உள்ள Epiglottis போன்ற வால்வுகள் வாந்தியானது சுவாசப்பைக்குள்ளே செல்வதை தடுக்கும் முயற்சியில் ஈடுபட்டு, உடனே ஆழ்ந்த சுவாசத்தின்பின் அவையும் மூச்சுப் பாதையை அடைக்க வயிற்றிலும் நெஞ்சிலுமாக மேலும் அழுத்தம் தீவிரமாகி பிரிமென் தகடு Diaphragm விசையோடு ஓங்கி இரைப்பைக்கு ஒரு உதைகொடுக்க அதன் மேல் வாசல் திறந்து உணவுக்குழாய் வழியே அதிக விசையோடு அகலவாய் திறந்து வெளியேறும் அந்த வாந்திக்கு இவ்வளவு பின்புலமா என்று வியக்கத் தோன்றும்.

தலையில் அடிபட்டு அல்லது மயக்கம் போட்டு விழுந்தாலும் மருத்துவரிடம் போகும்போது அவர் கேட்கும் முதல் கேள்வி வாந்தி வந்ததா என்பதுதான் அப்படியென்றால் அது ஒரு தீவிர மூளைக்காயம் ஏற்பட்டுள்ளது, உடனடியாக கவனிக்கப்பட்டு அவர் உயிரை காப்பது அவசியம் என்பதற்கான அடையாள அறிகுறி.

பொதுவாக வாந்திக்குப் பல பின்புல காரணங்கள் இருந்தாலும் சிலவற்றை குறிப்பிட விரும்புகிறேன். இரைப்பை அழற்சி, உணவுக் குழாய்ப் புண்கள், குடல் தொடர்பான நோய்கள், நச்சுத்தன்மையான அல்லது கெட்டுப்போன (Food poisoning) அல்லது உடலுக்கு ஊறு விளைவிக்கும் எந்த உணவும் உள்ளே சென்றாலும் சில நிமிடங்களிலேயே வெளித்தள்ளப்படும் அனுபவம் பலருக்கு உண்டு.

தலைச்சுற்று அல்லது காதில் ஏதாவது பிரச்சினை என்றாலும் உங்களை கீழே விழாமல் தலையில் அடிபடாமல் பாதுகாப்பதும் வாந்தி தான். வயிற்றுக்குள்ளே எந்த உறுப்பில் அழற்சி (Inflammation) ஏற்பட்டாலும் வயிற்று வலியோடு முதலில் கைகோர்த்து நம்மை காப்பதும் வாந்திதான். உடலில் எங்காவது கிருமித் தொற்றுகள் ஏற்பட்டாலும் நோய் எதிர்ப்பாற்றலோடு நடைபெறும் யுத்தமும் அதன் விளைவான காய்ச்சலும், அப்போது தேவை ஏற்பட்டால் வாந்தியும் முடிந்தவரை உதவி செய்ய உடல் தன்னைத்தானே குணமாக்கும் வழிமுறையை முன்னெடுக்கும்.

மற்றும் மைக்ரேன் என்ற ஒற்றை தலையிடியின் போதும் வலியின் தன்மை அதிகமாவதால் ஐம்புலன்களான கிரேனியல் நரம்புகளின் உறுத்தலால் வாந்தி உண்டாகிறது. அந்த வாந்தி வரவில்லை என்றால் வலி மேலும் அதிகமாகி மனவழுத்தம் மேலோங்கி நோயாளி பல உளவியல் பிரச்சனைகளுக்கும், தற்கொலைக்கும் வழிவகுக்கும் என்பது ஆய்வுகளின் முடிவாகும். மூளையில் ஏற்படும் பலவிதமான சிறிய அல்லது பெரிய மாற்றங்களிலும், மூளைநோய்களிலும் வாந்திதான் முன்களப்பணியாளன்.

( 32ம் பக்கம் வருக )



கனடா மூர்த்தி

# கண்டதை மீண்டும் சொல்லுகிறேன் - 26

கனடாத் தமிழர்கள் கைக்கொள்ளும் இலக்கியம், பத்திரிகை, சஞ்சிகை, அரங்கியல், தொலைக்காட்சி, வானொலி, சினிமா என இன்னும் பலவற்றினதும் 'தரத்துக்கும்', அவற்றுக்குத் தமிழ்க் கனடியர்கள் தரும் ஆதரவின் அளவிற்கும் நேர்த்தொடர்பு கிடையாது என சென்ற இதழில் இத் தொடரில் எழுதியிருந்தேன். என் நெருங்கிய சில நண்பர்கள் அந்தக் கூற்றை விவாதப் பொருளாகவும் கணித்தி - ருந்தார்கள்.

விவாதம் செய்த நண்பர்கள் கனடாவில் ஊடகத்துறையில் இருப்பவர்கள். மேலே நான் சொன்ன வரிகளில் வரும், 'தரம்' அதாவது ஸ்டான்டர்ட் (Standard) என்பதை 'விதிமுறை' அதாவது நோர்ம் (Norm) என என்பதாக மாற்றி அவர்கள் விளங்கிக்கொண்டிருந்த காரணத்தால் நானும் அவர்களோடு நட்பார்ந்த கடுமையோடு விவாதத்தில் ஈடுபட - அவ்வரிகள் கொண்டு போயின. தரம் என்பது சமூகத்தில் நாம் கைக்கொள்ளுமொரு 'அளவுகள் தெரியாத அளவுகோலாகும்' என்று சொல்லி அவர்களோடு வாதிட்டேன். இந்நிலையில் தரம் என்றால் என்ன என்ற கேள்வி எழுகிறதல்லவா. ஒருவர் தன்னை அல்லது பிறரை மதிப்பீடு செய்யும் போது பயன்படுத்திக்கொள்ளும் எதிர்பார்ப்பின் அளவைத்தான் நாம் 'தரம்' என்று சொல்லிக் கொள்கிறோம்.

ஆனால், தரம் என்பது விதிமுறை அல்ல. விதிமுறை என்பது சற்றே இறுக்கமானது. அது ஒரு சமூகநெறியாக, சூழ்நிலைகளுக்கு ஏற்ப அது பல அர்த்தங்களில் பயன்படுத்தப் - படுகிறது. அதை அளவுகோலாகக்கூடக் கருதமுடியும். சமூகத்தில் இந்த "தரம்' குறித்த எண்ணப்பாடும், 'விதிமுறை'களும் ஒருசேரக் கடைப்பிடித்து வரப்படுவதால்தான் பல விவாதங்கள் ஏற்படுகின்றன. 'தரம்', 'விதிமுறை' இவ்விரண்டிற்கிடையே தொடர்புகள் இருந்தாலும் உண்மையில் இரண்டும் வெவ்வேறானவை.

ஒரு சமூகத்தில் 'தரம்', 'விதிமுறை' என்ற இந்த இரண்டுமே சமூகத்தில் (1) நல்லது கெட்டது பற்றிய பாரம்பரிய நம்பிக்கைகள், (2) உடை, பழக்கம், மரபுகள் என்பன குறித்த சமூகப் பார்வைகள், (3) வெற்றி, அந்தஸ்து குறித்த எண்ணப்பாடுகள், (4) தனிப்பட்ட வாழ்க்கைமுறை ஒழுக்கம் என பல்வேறு மனிதமன மதிப்பீடுகளைத் தன்னகத்தே தெளிவாகக் கொண்டவையாக இருக்கின்றன.

இதை இன்னும் விளக்கமாக வேறுவகையில் சொன்னால், மதிப்பீடுகள் எவ்வளவு உயர்ந்திருக்க வேண்டும் என்பதைத் 'தரம்' சொல்கிறது. அந்த மதிப்பீடுகளை நம்வசப்படுத்த நாம் எப்படி நடந்து கொள்ளவேண்டும் என்பதை 'விதிமுறை' சொல்கிறது. 'தரம்' கைக் கொள் - ளப்படாவிடின் மதிப்பு .இழப்பு ஏற்படும். 'விதிமுறை'களை கைக்கொள்ளாது போனால் - அதற்கான சமூகத் தண்டனையாக - விமர்சனங்களும், புறக்கணிப்புக்களும் பரிசாகக் கிட்டலாம்.

உதாரணத்திற்கு ஒரு கூட்டம் ஆரம்பிக்கும்போது ஒரு நிமிடம் அமைதியாக எழுந்து மௌனமாக நின்றுவிட்டு அமரும் வழக்கம் தற்போது உண்டு. இந்த வழக்கம் பல தசாப்தங்களிற்கு முன்னர் இருந்ததா இன்னும் சில தசாப்தங் - களுக்குப் பின்னர் அது தொடர்ந்து இருக்குமா என்ற கேள்விகள் தற்போது அவசியமில்லை. ஆனால் இன்று அது ஒரு 'விதிமுறை'யாக நம் சமூகத்தில் இருக்கிறது.

அதை ஒரு 'விதிமுறை'யாகத்தான் நாம் பார்க்கிறோமே தவிர, அதைச் செய்வதானதை 'தரம்' என்று நாம் சொல்வது கிடையாது. ஆனால் அந்த மௌன அஞ்சலியை 'யாருக்குச் செய்கிறோம்' என்பதை வரையறுத்துச் சொல்லி எழுந்து நிற்கும்போது அச் செய்கைக்கு ஒரு 'தரம்' தானாகக் கிடைத்துவிடுகிறது.

மேலே சொன்னது, 'தரம்', 'விதிமுறை' என்பன குறித்த ஒரு எளிமையான புரிதல்தான். அதைப் புரிந்துகொண்டவர்களாகத்தான் நமது சமூக வாழ்க்கை தொடர்கிறது. சிலவேளைகளில் புரிதலின் நிலையளவு வேறுபடும்போது, 'தரம்', 'விதிமுறை' என்பன நம்மிடையே விவாதப் பொருளாகவும் மாறி நம்மை அலைக்கழிக்கிறது. இக்கருத்தைத்தான் மேலேசொன்ன விவாதத்தில் ஈடுபட்ட நண்பர்களோடு பகிர்ந்து கொண்டேன். 'நம் சிந்தனை நிலையில் மட்டுமல்ல சிந்திப்பு நிலைகளிலும் மாற்றம் தேவை' என்றேன்.

இந்தவகை விவாதம் சமூகத்தில் பல தளங்களில் நடக்கிறது. அப்படிக் 'கண்டதை மீண்டும் சொல்கிறேன்'. வழிகாட்டியாக இருக்கவேண்டிய தனி மனிதர்கள் மட்டுமல்ல, கனடாவின் சில தமிழ் அமைப்புக்கள்கூட தம்மிடையே பெரும் முறுகல் கொண்டு செயல்படுகின்றன. அதன் எதிரொலிகளாக பல்வேறு வடிவங்களில் சமூக வலைத்தளங்களும் அந்த முறுகல்களைப் பதிவு செய்து வருகின்றன. முன்பு மொட்டைக் கடிதங்கள் வருவதுபோல இப்போது மொட்டை வீடியோக்கள் டிக்டொக் எனப் பரவிவருகின்றன. வெட்கக்கேடு. அவை குறித்த மதிப்பீடுகள் எதுவுமின்றி, நம்மில் பலரும் அவற்றைக் கண்டும் 'காணாமல்' போய்க்கொண்டிருக்கிறோம் என்பதையும் கவனித்திருப்பீர்கள்.

சமூகத்திற்கு முன்னுதாரணமாத் திகழவேண்டியவர்கள் செய்கின்ற 'சேறுபூசல்களும்', 'கடந்து போதலும்' தொடர்கின்றன. போதாக்குறைக்கு, கனடாவில் தம்மை ஊடகவியலாளர்கள் என்று சொல்பவர்களில் சிலரும் அதில் அடங்குகிறார்கள். எது எப்படி இருப்பினும் ஒன்று மட்டும் உண்மை. இன்றைய காலகட்டத்தில் கனடிய தமிழ்ச் சமூகத்தில் நாம் காணவிரும்பும் 'தரம்', 'விதிமுறை' ஆகிய இரண்டையுமே ஏற்க மறுத்து வாழ விரும்பும் தனி மனிதர்களை இங்கு காண்கிறோம். தமிழ் அமைப்புக்களையும் காண்கிறோம். கூடவே, தமிழ் ஊடகவியலாளர்களையும் காண்கிறோம். அதுதான் சோகம். இதனால்தான் 'கனடாத் தமிழர்கள் மற்றைய புலம்பெயர் நாடுகளிற்கு முன்னுதாரணமாக எதிர்காலத்தில் திகழப் போகிறார்கள்' என்று வெளிநாட்டுத் தமிழர்கள் எப்போதாவது கருத்துரைக்கும்போது ஐயோ பாவம் என ஒருவகைப் பயம் ஏற்படுகிறது.



அ. முத்துலிங்கம்

# கார்ச் சாரதி

விமான நிலையத்துக்கு போவதற்கு ஒரு வாடகை கார் தேவைப்பட்டது. வழக்கம்போல தொலை - பேசியில் அழைத்தேன். அவர்கள் ஒரு வாடகைக் காரை அனுப்பிவைத்தார்கள். என்னுடைய வீட்டிலிருந்து ரொறொன்ரோ விமான நிலையம் போவதற்கு முக்கால் மணிநேரம் பிடிக்கும். ஆகவே அதையும் கணக்கில் எடுத்துக்கொண்டு ஒரு குறிப்பிட்ட நேரத்துக்கு காரை அனுப்பும்படி சொல்லியிருந்தேன். அப்படியே அவர்கள் சொன்ன நேரத்துக்கு காரை அனுப்பியிருந்தார்கள்.

வழக்கமாக வரும் சாரதி ஒரு பஞ்சாபிக்காரராக இருப்பார். அல்லது பாகிஸ்தான்காரராக இருப்பார். சிலசமயம் ஜமாய்க்காகாரர் வருவதுமுண்டு. இந்த தடவை அதிசயமாக 30 வயது மதிக்கக்கூடிய ஓர் இலங்கைக்காரர் வந்திருந்தார். என்னைக் கண்டதும் நீங்கள் தமிழா என்றார். அப்படித்தான் சம்பாசணை ஆரம்பமானது. அரைக்கை சட்டை அணிந்திருந் - தபடியால் புஜங்கள் அடக்கமுடியாமல் உருண்டு திரண்டு வெளியே தெரிந்தன. கழுத்திலே தாலிக்கொடிக்கு சமமான தடிப்பில் ஒரு சங்கிலி அணிந்திருந்தார். பாரமான என் பயணப்பெட்டியை ஒற்றைக்கையால் தூக்கி காரில் வைத்தார். அவர் இயக்கத்தில் இருந்திருக்கவேண்டும், அப்படியான உடல் வாகு. நான் காரில் ஏறி அமரமுன்னரே தன் வரலாற்றில் பாதியை என்னிடம் கூறிவிட்டார்.

அவர் கனடாவுக்கு வந்து ஐந்து வருடங்கள் ஆகின்றன. கனடா வந்த பின்னர் மணமுடித்த அவருக்கு இரண்டு பிள்ளைகள். இதற்கு முன்னர் ஒரு தொழிற்சாலையில் சில மாதங்கள் வேலை பார்த்தார், பிடிக்கவில்லை. அதை உதறிவிட்டு வாடகைக்கார் ஓட்டுகிறார். இந்த வேலை அவருக்கு பிடித்துக்கொண்டது என்றார்.

சொந்தமான வண்டியா? என்று கேட்டேன். “வாடகைக்கார் நம்பர் பிளேட் ஒன்றின் விலை தற்போது 200,000 டொலர். இவ்வளவு தொகை காசு முதலீட்டுக்கு கிடைக்கும் வருமானம் போதாது. நான் சம்பளத்துக்கு வேலை செய்கிறேன், சராசரி மாத வருமானம் 3000 டொலர், சில மாதங்களில் கூடிய மணித்தியாலங்கள் வேலை - செய்தால் 4000 டொலர்கூட கிடைக்கும். எனக்கு இது போதுமானது“ என்றார்.

எப்படி இந்த வேலை உங்களுக்கு கிடைத்தது?

“என்னுடைய அண்ணர் வாடகைக்கார் வைத்து ஓட்டுகிறார். அவர்தான் என்னை இந்த வேலையில் சேர்த்துவிட்டவர். நான் இங்கே வருமுன்னரே அண்ணர் சொல்லி இலங்கையிலேயே கார் ஓட்டப் பழகி லைசென்சும் எடுத்துக்கொண்டுதான் வந்தேன். இங்கே வந்தபிறகு கனடா லைசென்ஸும் எடுத்தேன். கனடாவில் இரண்டு நாள் வாடகைக்கார் ஓட்டிப் பார்த்தேன், பிடிச்சுப்போட்டுது“ என்றார்.

திரும்பவும் நாட்டுக்கு போனீர்களா? “நான் ஏன் போகவேண்டும். நான் நாட்டை என்னுடன் கொண்டு வந்திருக்கிறேன்“ என்றார். விமான நிலையத்தில் என்னை ஐந்து நிமிடம் முன்னதாகவே இறக்கிவிட்டு அவர் போய்விட்டார்.

அவர் கடைசியாகச் சொன்னது என்னை யோசிக்க வைத்தது. அவருடைய தம்பி ஒருவர் இன்னும் இலங்கையில் இருக்கிறார். அவர் அடுத்த மாதம் கனடாவுக்கு வருகிறார். அவரும் கார் ஓட்டப் - பழகி லைசென்ஸ் எடுத்துக் கொண்டுதான் வருகிறார். அவருக்கும் ஒரு சாரதி வேலை இங்கே அவர் ரெடியாக வைத்திருக்கிறார்.

சில வருடங்களுக்கு முன்னர் நான் படித்த நேர்காணல் ஒன்று ஞாபகத்துக்கு வந்தது. கிழக்கு ஐரோப்பாவின் ஒரு பகுதியிலிருந்து வட அமெரிக்காவுக்கு அகதியாக வந்த ஒருவர் கொடுத்த பேட்டி. ஒருநாள் இரவு அவருக்கு படுக்க இடமில்லாமல் ஒரு நிறுவனத்தின் வாசலில் படுத்து தூங்கிவிடுகிறார்.

அடுத்தநாள் காலை கம்பனி முதலாளி வந்து அவரை காலினால் தட்டி எழுப்புகிறார். முதலாளி என்ன நடந்தது என்று கேட்கிறார். அகதி தனக்கு வேலையில்லை, தங்குவதற்கு இடமும் இல்லை என்று சொல்கிறார். என்னவேலை தந்தாலும் முகம் சுளிக்காமல் செய்வீரா என்று முதலாளி கேட்கிறார். அகதி ஆம் என்று பதிலளிக்கிறார். அது பிணம் அலங்கரிக்கும் கம்பனி. முதலாளி அந்தக் கலையை அகதிக்கு கற்றுத் தருகிறார். அகதி அருவருப்பில்லாமல் ஆர்வமாகக் கற்றுக்கொள்கிறார். இரவுக்கல்லுரிக்கு சென்று பிண அலங்காரம் பற்றி படிக்கிறார்.

நாளடைவில் தானே ஒரு கம்பனி ஆரம்பித்து பல கிளைகளையும் திறக்கிறார். வட அமெரிக்காவில் மிகவும் வெற்றிகரமான தொழில் நிபுணராக அறியப்படுகிறார். நேர்காணலின் முடிவில் அவர் சொல்லுகிறார். “அன்று நான் ஒரு பிண அலங்காரம் செய்யும் கம்பனியின் வாசலில் தூங்கியதால் இன்று ஒரு பிண அலங்கார நிபுணனாக அறியப்படுகிறேன். அன்று நான் ஒரு தச்சுக் கம்பனியின் வாசலில் தூங்கியிருந்தால் இன்று ஒரு தச்சுத்தொழில் நிபுணனாகி - யிருப்பேன். உலர் சலவை கம்பனியின் வாசலில் தூங்கியிருந்தால் இன்று ஓர் உலர்சலவை நிபுணனாகியிருப்பேன்.”

உலகத்தில் பல தொழில் தேர்வுகள் இப்படி தற்செயலாகத்தான் நேர்கின்றன. அண்ணன் சாரதி, தம்பி சாரதி, அடுத்த தம்பியும் சாரதி. அண்ணன் விருந்து மண்டப நிர்வாகி, தம்பியும் அதுதான், அடுத்துவரும் தங்கையும் அதுதான். முன்னே வருபவர் பாதை போட பின்னே வருபவர்கள் தொடர்வார்கள்.

நாளை காலை நான் வாசல் கதவை திறக்கும்போது ஓர் அகதி அங்கே படுத்திருந்தால் என்ன செய்வது. அவர் கதி என்னாவது. நினைக்கும்போதே மனம் நடுங்குகிறது. இன்னொரு தமிழ் எழுத்தாளரை இந்த உலகம் தாங்குமா?

# படித்ததும் கேட்டதும் - 86

முனைவர் பால. சிவகடாட்சம்



## வண்டையும் குழப்ப விரும்பாத காதலன்

பூவில் வண்டு கூடும் - கண்டு
பூவும் கண்கள் மூடும்

என்னும் திரை இசைப்பாடல் தரும் அர்த்தம் போல் பூவில் வண்டு கூடுவதில்லை. உண்மையில் பூவில் இரண்டு தேனீக்கள் கூடுவது தேன் குடிப்பதற்காகவே அன்றித் தம்முள் கூடுவதற்காக அல்ல. எனினும் தேனும் மகரந்தமும் சேகரிக்கப் பூவுக்குள் வண்டு நுழையும்போது அது ஒரு முக்கியமான இனப்பெருக்க நிகழ்வுக்குத் துணை புரிகின்றது. அந்த நிகழ்வுதான் மகரந்தச் சேர்க்கை. ஒரு பூவிலிருந்து மற்றொரு பூவிற்கு மகரந்தத்தை எடுத்துச் சென்று கரு உருவாக உதவுவதன் மூலம், தேனீக்கள் தாவரங்களின் இருப்பை உறுதி செய்கின்றன. காற்றினால் செயன்முறைப் - படுத்தப்படும் மகரந்தச் சேர்க்கை சாத்தியம் இல்லாத செடிகொடிகளும் மரங்களும் தேனீக்கள் போன்ற பூச்சி மற்றும் பறவை இனங்களையே நம்பியிருக்க வேண்டியுள்ளது.

மகரந்தச் சேர்க்கை உலகளாவிய உணவு உற்பத்தியை உறுதிப்படுத்துவது மட்டுமல்லாமல், காட்டு தாவரங்கள் செழித்து வளர உதவுவதன் மூலம் பல்லுயிர்ப் பரம்பலையும் நிலைநிறுத்து - கிறது. தேனீக்கள் இல்லாமல், பல சுற்றுச் - சூழல் அமைப்புகள் சரிவை எதிர்கொள்ளும். இந்த உண்மையை எல்லாம் அறிந்துவைத் - திருந்த ஒருவரின் பாடல் போல் காணப்படு - கிறது சங்கத் தமிழ்ப்புலவரின் பாடல் ஒன்று. பொருள் தேடி வெளியூர் சென்றிருந்த உன் தலைவன் இதோ காட்டுவழியில் தேரில் வந்து கொண்டிருக்கின்றான். அவன் உன் நினைவாகவே உள்ளான் என்று தோழி ஒருத்தி தன் தலைவியைத் தேற்றுவதைக் கூறும் பாடல் இது.



அதேசமயம் பூவில் தன் துணையுடன் உறங்கும் தேனீக்களை அச்சுறுத்தும் ஒலியை எழுப்பும் தேர் மணியின் நாவைக் கட்டிவிட்டுக் காட்டு வழியே பயணிக்கும் அவள் தலைவனின் அக்கறையையும் கருணை உள்ளத்தையும் எடுத்துக் காட்டுவதாகவும் இப்பாடல் அமைந்துள்ளது.

கருவி வானம் கதழ் உறை சிதறி,
கார் செய்தன்றே, கவின் பெறு கானம்.
குரங்கு உளைப் பொலிந்த கொய்சுவற் புரவி,
நரம்பு ஆர்த்தன்ன, வாங்கு வள்பு அரிய,
பூத்த பொங்கர்த் துணையொடு வதிந்த
தாது உண் பறவை பேதுறல் அஞ்சி,
மணி நா யாத்த மாண் வினைத் தேரன்,
உவக்காண் தோன்றும் (அகநானூறு - 4: 6-13)

வானத்தில் கருமேகம் சேர, மழைத்துளி சிதறும் நேரம்.
காட்டுவழி அழகு பெருகும்,

குரங்கின் தலைமயிர்போல் வளைந்த, பிடரி மயிர் உள்ள குதிரைகள் கடிவாளம் நெகிழ ஓட்டம் தரும்.

முள்ளிலவம் பூவில் சேர்ந்தே, பூந்தாது உண்ணும் வண்டுகள் தேரின் மணிச் சத்தம் கேட்டுப் பயந்து விடாது, தேர்மணியின் நாக்கை இழுத்து கட்டி, காட்டுப் பாதையில் பயணிக்கும் அவன் உன் முன்னே தோன்றுவான் நிச்சயம்.

## A Lover with Compassion and an Understanding of Nature

Beetles mate in a flower

The flower, it is said, closes its eyes modestly at the sight

But as the film song suggests, this is not quite true. In reality, bees do not mate in flowers. More often, two bees may be seen gathering in a flower, not to mate, but to drink nectar.

When a beetle or a bee enters a flower to collect nectar and pollen, it plays a crucial role in the plant's reproduction. By carrying pollen from one flower to another, bees aid in fertilization and the development of seeds and embryos. Plants and trees that cannot be pollinated by wind depend on birds and insects—especially honeybees.

Pollination not only supports global food production but also sustains biodiversity by helping wild plants thrive. Without bees, many ecosystems would eventually collapse.

A song by a Sangam Tamil poet seems to reflect an intuitive knowledge of this ecological truth. In the poem, a friend consoles the heroine, telling her that her lover—who had gone abroad in search of wealth—is returning through the forest in a chariot, carrying thoughts of her in his heart. The poem also reveals the lover's gentleness and sensitivity. As he travels through the forest, he ties the tongue of the chariot bell so it won't ring and disturb the bees resting together inside the flowers—bees who, like him, are faithful partners.

The beauty of the forest path deepens.
Horses, with manes curled like a monkey's hair,
Toss their napes as they gallop swift.
Beetles feeding on silk cotton blooms
Rest gently, fearing the chariot's bell—
Its chime might startle their quiet peace.
So, the tongue of the bell is tied in silence.

And the noble charioteer, bearing your thoughts,

Will surely appear before you.



திருமதி. ரஞ்சினி ஜெபநேசன்

# தமிழர் தகவலுடன் வாழும் நூறு வயதான எனது தந்தை

எனது தந்தை திரு. செல்லையா இரத்தினசிங்கம். எனது அம்மாவும் அப்பாவும் 1994ல் என்னுடன் வசிப்பதற்கு கனடாவுக்கு குடிபெயர்ந்தனர். நான் இவர்களின் ஏகபுத்திரி. எனது இரண்டு சகோதரர்களும் அமெரிக்காவில் வசிக்கின்றனர். எனது அப்பா எப்போதும் சுறுசுறுப்பாக இருப்பவர். இது அவரது இயற்கையான சுபாவம். வாசிப்பு இவரது உயிர் மூச்சு.

கனடா வந்தவுடனேயே தனது வாசிப்புக்கு தீனி போடுவதற்கு இலங்கையில் பிரசுரமாகும் வீரகேசரி, ஐலண்ட், சண்டே ஒப்சேவர் ஆகிய பத்திரிகை - களுக்கு சந்தா செலுத்தியதால் அவை வீடு தேடி வந்தன. ஆயினும் அவருக்கு திருப்தி ஏற்படவில்லை. எமது சமூகம் பற்றியதும், கனடாவில் நாம் வாழ்வதற்கான வழிவகைகளை தெரிவிக்கும் வகையிலுமான ஒரு பத்திரிகை கிடைக்காதோவென ஏங்கினார்.

அப்படியான நேரத்தில் எங்கள் வீட்டுக்கு அண்மை-யிலிருந்த சிவா கடை என்ற தமிழர் வர்த்தக நிறுவத்தில் தற்செயலாக தமிழர் தகவல் இருந்ததைக் கண்டு வீட்டுக்கு எடுத்து வந்தார். அதனைப் படித்தபோது அவருக்கு ஏற்பட்ட மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. அதன்பின்னர் ஒவ்வொரு மாதமும் ஐந்தாம் திகதி அக்கடைக்குச் சென்று ஒரு பிரதியை பெற்று வருவார். வெயிலோ மழையோ பனியோ புயலோ மாதாமாதம் சிவா கடைக்குச் சென்று தமிழர் தகவலை பெறுவதை தவறவிட -மாட்டார்.

அந்த மாதம் முழுவதும், அடுத்த மாத இதழ் வரும் வரை மீண்டும் மீண்டும் புரட்டி புரட்டி படித்தபடியே இருப்பார். தான் வாசிப்பவற்றை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்வார். சிலவற்றை எங்களுக்கும் வாசித்துக் காட்டுவார். இதனால் அவருக்கு ஏற்படும் மனநிறைவு அளப்பரியது.

வயது மூப்பு காரணமாக முன்னர் போல தாமாக சென்று தமிழர் தகவலை பெற்றுவர கடந்த பல வருடங்களாக அவரால் முடியாது போய்விட்டது. ஆனாலும் தகவல் வெளிவரும் ஐந்தாம் திகதியை அவர் மறந்துவிடமாட்டார். ஐந்தாம் திகதியானவுடன், “பிள்ளை, தமிழர் தகவல் வந்திருக்கும் - அது முடியமுன்னர் ஓடிப்போய் எடுத்துக் கொண்டு வா” என்று என்னை கலைக்கத் தொடங்கி விடுவார்.

நான் சென்று ஒரு பிரதியை எடுத்த வந்து கொடுப்பேன். அதைக் கையிலெடுத்து முதலில் தொட்டுப் பார்ப்பதும், புரட்டிப் பார்ப்பதுமாய் இருப்பார். ஆண்டு மலர்களை அந்த வருடம் முழுவதும் ஒவ்வொரு கட்டுரையாக ஆறுதலாக வாசித்து முடிப்பார்.

முப்பது வருடங்களுக்கு மேலாக தமிழர் தகவலோடு பிரயாணம் செய்த - படியால், மனதளவில் அதன் மேல் அப்பாவுக்கு ஒரு emotional attach-ment - அதாவது பற்றும் பாசமும் வந்து விட்டது என்று சொல்வேன்.

அண்மையில் அப்பாவின் நூறாவது பிறந்தநாள் வந்தது, அதனை மிகவும் அமைதியாகவே கொண்டாடினார். அவரது விருப்பப்படி இலங்கையில் ஒரு சிறுவர் பராமரிப்பு இல்லத்துக்கும், முதியோர் இல்லத்துக்கும் உணவு வழங்கியதில் அவருக்கு மிகவும் மனநிறைவு.



கொழும்பில் அண்டர்சன் தொடர்மாடியில் நாங்கள் வசித்து வந்தோம். அப்போது எமக்கு அண்மையில் தமது குடும்பத்தோடு வசித்து வந்த திரு. திருச்செல்வத்துடன் (தமிழர் தகவல் ஆசிரியர்) நன்கு அறிமுகமானவர் எனது அப்பா.

தமிழர் தகவல் எங்கள் வீட்டில் மீள்சுழற்சிக்குப் போவதில்லை. அனைத்து இதழ்களும் அப்பாவின் அறையில் ஒரு மேசையில் அவை வாழுகின்றன. அவை மாத்திரம் வாழவில்லை. எனது அப்பாவையும் வாழவைத்துக் கொண்டிருக்கின்றன. சுருக்கமாக சொல்வதானால், தமிழர் தகவலுக்கு எனது தந்தை ஒரு addict.

எமது அப்பாவை வாழ வைத்துக் கொண்டிருக்கும் தமிழர் தகவலுக்கு எங்கள் குடும்பத்தின் சார்பில் நன்றி.

# கைத்தொலைபேசிகளின் களவு அதிகரிக்கிறது

அண்மைக் காலத்தில் கைத்தொலைபேசிகளின் களவு அதிகரித்து வருவதாக பொலிஸார் பொதுமக்களின் கவனத்துக்கு கொண்டு வந்துள்ளனர். களவாடப்படும் கைத்தொலைபேசிகள் உடனடியாகவே கைமாறி விற்பனை செய்யப்படுகின்றனவாம். மக்கள் அதிகமாகக் கூடும் இடங்களில் இக்களவு இலகுவாக இடம்பெறுகிறது. கடந்த வருடம் இடம்பெற்ற பிரைட் பிரம்மாண்ட வீதி ஊர்வலத்தின்போது 300க்கும் அதிகமான கைத்தொலைபேசிகள் களவாடப்பட்டுள்ளதாக பொலிஸார் சுட்டிக்காட்டியுள்ளனர். நகைக்கடைகளில் கொள்ளைச் சம்பவங்கள் குறைந்து, தொலைபேசி விற்பனை நிலையங்கள் இப்போது இலக்கு வைக்கப்படுவதாகவும் பொலிஸார் அறிவித்துள்ளனர்.

# நல்லூரில் நந்தனார்



ப. ஸ்ரீஸ்கந்தன்

## ஞாபகம் துளிர்க்கிறதே - 47

நல்லூரான் திருவிழாவுக்கு இம்முறை போக முடியவில்லை. கடந்த பத்து வருடங்களாகப் போய்வந்தேன். பக்தர்களின் வெள்ளத்தில் மிதந்தபடி முருகனின் தேர் குலுங்கிக் குலுங்கி வரும் காட்சியை இம்முறை தவற விட்டுவிட்டேன்.

அழைப்பு வந்தால்தான் போக முடியும் என்பார்கள். அதில் ஒன்றும் எனக்கு நம்பிக்கை இல்லை. அவ்வாறான உறவாடல் எனக்கும் முருகனுக்கும் இருந்தது.

எனது தம்பி தேருக்குப் போவதற்கு விமான டிக்கற் எடுத்திருந்தார். விமானப் பணியாளர்கள்

பணிப்புறக்கணிப்பு செய்ததால் தேருக்குப் போக முடியவில்லை.

அழைப்பு வரவேண்டுமென்பது சரியாக இருக்குமோ?

ஊரில் இருக்கிற நாட்களில் எமது வீட்டிலிருந்து அடிக்கடி நடந்துபோகிற தூரத்தில் நல்லூர் கோயில் இருக்கிறது. பருத்தித்துறை வீதிக்கும் கோயிலுக்கும் இடையே முன்னர் தடுப்பு வேலி இருக்கவில்லை. அந்நாட்களில் ஒவ்வொரு வெள்ளியும் மாலையில் கோயிலின் முன்னால் மணலில் இருந்து நானும் நண்பர்களும் அரட்டையடிப்பது வழக்கம். பரவசமான ஒரு சூழலை அந்த மண் எமக்குத் தந்தது. அதை விளங்கப்படுத்த முடியாது.

பலர் கூட்டம் கூட்டமாக இருப்பர். நடுவில் ஒருவர் கதை சொல்லிக்கொண்டிருப்பார். கதை கேட்ப - வர்களின் தலையாட்டல்களையும் முகபாவங்க - ளையும் பார்த்து நாங்கள் சிரித்துக் கொள்வோம். ஒருநாளும் அவர்களின் கதைகளையோ சமய உரைகளையோ நாம் செவி மடுக்கவில்லை.

கோயிலுக்கு முன்பாக முருகன் புத்தகசாலை இருந்தது. அங்கு இந்திய சஞ்சிகைளை, குறிப்பாக கலைமகள், மஞ்சரி ஆகியவற்றை வாங்குவதை வழக்கமாகக் கொண்டிருந்தேன். அந்நாட்களில் தனியனாக அம்மண்ணில் குந்தியிருப்பதுண்டு. முருகனுடன் தனியாகப் பேசுவது ஒரு சுகம்.

எங்கள் இளவயதில் ஒவ்வொரு தேர்த் திருவிழா - வின்போது அதிகாலை பிரதட்டை செய்வது வழக்கம். அப்போது தீர்த்தக் கேணிக்கும் கோயிலுக்கும் இடையே பருத்தித்துறை வீதி சென்றது. பிரதட்டை செய்வது சுலபமாக இருந்தது. இப்போது கோயிலையும் கேணியையும் இணைத்து வீதியை சுற்றி அமைத்துவிட்டார்கள்.

திருவிழாக் காலங்களில் முன்னர் தீர்த்தக் கேணிக்கு அருகில் தாற்காலிகமாக பொலிஸ் நிலையம் அமைக்கப்பட்டிருக்கும். கோப்பாய் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியாகவிருந்த இன்ஸ்பெக்டர் இராசையா இங்கு பொறுப்பாக இருப்பார். தன்னந் தனியனாக கூட்டத்தை அடக்கிக் கொண்டிருப்பார். இறுதிக் காலத்தில் கதிர்காமக் கந்தன் ஆலயத்தில் தொண்டராக வாழ்ந்து முத்தியடைந்ததாக தகவல்.

பெருந்திருவிழாக் காலங்களில் கோயிலைச் சுற்றிவரவுள்ள வீதிகளில் போடப்படும் இரும்பு வேலிகள் குறித்து முறைப்பாடுகள் கோயில் நிர்வாகி குமாரதாஸ சயந்தன மாப்பாணருக்குப் போகின்றன. முன்னரைப் போல நின்று கும்பிட முடியவில்லை, முருகனுக்கும் எங்களுக்குமிடையே ஏன் வேலி என்கிறார்கள்.

விடயம் அதுவல்ல. முன்பெல்லாம் வாகனம் என்றால் எப்போதாவது ஒரு பஸ் வண்டி அவ்வீதி வழியாகச் செல்லும். இப்போது அப்படியல்ல. எக்கச்சக் -கமான வாகனங்கள் வீதிகளில் மின்னல் வேகத்தில் கடந்து போகின்றன. மண்ணையும் மண்ணின் புனிதத்தையும் பாதுகாக்க வேலி நல்லதாகவே படுகிறது.

நல்லூர் திருவிழாக்கள் வருடந்தோறும் பல்வேறு புதுமையான மாற்றங்க - ளுடன் நடந்தேறி வருவதைக் காண முடிகிறது.

உள்வீதியில் பலவிதமான பண்பாட்டு நிகழ்வுகள் இடம்பெறுகின்றன. நாதஸ்வர திருப்புகழ், தாளவாத்தியம், முருக நாம பஜனை, வளைகுழல் வாத்தியம், பூதநாட்டியம், நாதஸ்வர பஞ்சரத்தினம், மிருதங்கம், வேணுகானம், மணியோசை, புஷ்பாஞ்சலி என்பவை இவற்றுள் சில.

இதில் முக்கியமானது கடந்த மாதம் 13ம் திகதியன்று 16ம் திருவிழாவின் - போது இடம்பெற்ற நந்தனார் சரிதம். திருப்புன்கூர் கிராமத்திலுள்ள சிவன் ஆலயத்தின் திருவாயில் புறம் நின்று, ஆடுதலும் பாடுதலுமாய் பரவச நிலையில் தன்னைத் தரிசித்த தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த நந்தனுக்கு, மறைந்திருந்த நந்தியை விலக்கி சிவன் காட்சியளித்த கதை.

நல்லூர் முருகன் ஆலயத்தில் சிவன் - நந்தன் கதை ஏன் நிகழ்த்தப்பட்டது என்ற கேள்விக்கு மேலாக இந்தக் கதை மூலம் எமது சமூகத்துக்கு பல செய்திகள் சொல்லப்பட்டுள்ளன என்பது நோக்குதலுக்குரியது.

தாழ்த்தப்பட்டோர் என ஒரு பகுதியினரை ஆலயங்களுள் அனுமதிக்காத காலம் இருந்தது. மாவிட்டபுரம் கந்தசாமி கோவிலுக்குள் போவதற்குப் போராட வேண்டியிருந்தது. எல்லோரும் சமம் என அனைவருக்கும் திறந்து விடப்பட்ட கோயில்களில் நல்லூர் முதன்மை வகித்தது இங்கு குறிப்பிடத்தக்கது.

கடந்த சில வருடங்களாக ஒருமுகத் திருவிழாவின்போது பிரசன்னா குருக்களின் கட்டியம் கூறல் பலரையும் ஈர்த்திருந்தது. ஸ்ரீமகா ராஜாதி ராஜ என ஆரம்பித்து, ஈரேழு பதினான்கு லோகத்தின் அதிபதி, நாடாளும் நாயகன், வேதத்தின் மூலவன், அழகன், தமிழ்க் கடவுள் நல்லூர்க் கந்தசாமி பரியேறி வருகிறார் என்ற அவரது கர்ஜனை மெய்சிலிர்க்க வைக்கும்.

இப்போது தெற்கு வீதியில் கந்தரனுபூதியும், வடக்கு வீதியில் திருவாசகமும் நெஞ்சுருக ராகத்தோடு அவர் பாடுவது திருவிழாக்களின் உச்சமாக இருக்கிறது. கோயிலைச் சுற்றி சமயச் சொற்பொழிவுகள், பிரசங்கங்கள், இசை - நடன நிகழ்வுகள், மாணவர் சமய போட்டிகள் என தினந்தோறும் தமிழ் மணம் கமழ்கிறது. இளம் கலைஞர் மன்றம், இந்துசமய அலுவல்கள் திணைக்களம், துர்க்கை அம்மன் மணிமண்டபம் என பல மன்றங்கள் நிகழ்ச்சிகளை நடத்துகின்றன. செயற்திறன் அரங்கு பத்து நாட்கள் நாடகத் திருவிழாவை நடத்தியது.

தமிழ்க் கடவுளான முருகனின் திருவிழா பல்வேறு பரிமாணங்களில் இப்போது முனைப்புப் பெற்று வருகிறது. நல்லூர் இராசதானியை உள்ளடக்கிய இப்பிரதேசத்தை புனித நகராகப் பிரகடனப்படுத்த வேண்டும். இதுவே ஈழத்தமிழரின் ஓர் அடையாளமாக விளங்கப் போகிறது.

# நல்லூர் கந்தசுவாமி கோவில் பெருந்திருவிழா

நல்லூர் கந்தசுவாமி கோவில் வருடாந்த பெருந்திருவிழா கடந்த மாதம் 21ம் 22ம் திகதிகளில் இடம்பெற்ற தேர், தீர்த்த உற்சவங்களுடன் நிறைவுபெற்றது. உலகின் பல பாகங்களிருந்தும் சென்ற லட்சோப லட்சம் மக்கள் 25 நாள் திருவிழாக்களிலும் பங்குபற்றி இறையாசி பெற்றனர்.








# மன்னார் மடுமாதா வருடாந்த உற்சவம்

மன்னார் மடுமாதா வருடாந்த உற்சவம் வழமைபோன்று கடந்த மாதம் பக்திபூர்வமாக இடம்பெற்றது. அன்னையின் திருச்சொரூபம் பூஜை வழிபாட்டின் பின்னர் வீதி வழியாக மக்கள் வழிபாட்டுக்காக ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டது.








# தமிழர் தகவல் 35வது ஆண்டு பூர்த்தி விழா

1991 பெப்ரவரி மாதத்திலிருந்து ஒவ்வொரு ஐந்தாம் திகதியன்று அறாத்தொடராக வெளிவந்துகொண்டிருக்கும் தமிழர் தகவல் சஞ்சிகை அடுத்த நான்கு மாத முடிவில் (2026 ஜனவரி) 35 ஆண்டுகளை பூர்த்தி செய்யவுள்ளது. வழக்கம்போல ஆண்டு மலர் வெளியீடும் விருதுகள் வழங்கலும் இணைந்ததாக அதற்கான விழா அடுத்த வருட முற்பகுதியில் இடம்பெறும். 35வது ஆண்டு பூர்த்தி மலரை தயாரிக்கும் பணிகளை ஆரம்பித்துள்ளோம். இது தொடர்பான மேலதிக விபரங்கள் அடுத்த மாத (அக்டோபர்) இதழில் வெளிவரும்.

# ரொறன்ரோ, மார்க்கம் உள்ளூராட்சியில் பங்கேற்க தமிழர் எதிர்கொள்ளும் இரண்டு இடைத்தேர்தல்கள்

கனடாவில் தமிழர்கள் செறிந்து வாழும் ரொறன்ரோ மற்றும் மார்க்கம் நகரங்களின் இரண்டு வட்டாரங்களுக்கான இடைத்தேர்தல் இந்த மாதம் 29ம் திகதி திங்கட்கிழமை இடம்பெறவுள்ளது. ரொறன்ரோவின் 25ம் வட்டாரமான ஸ்காபரோ- றூஜ்பார்க் உறுப்பினராகவிருந்த ஜெனிபர் மக்லவி, ஏஜக்ஸ் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினராகவும், மார்க்கம் 7ம் வட்டார உறுப்பினராகவிருந்த ஜுனைதா நாதன், பிக்கரிங்-புறுக்லின் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினராகவும் கடந்த ஏப்ரல் மாதம் இடம்பெற்ற பொதுத்தேர்தலில் தெரிவானதால் ஏற்பட்ட வெற்றிடங்களை நிரப்ப இந்த இடைத்தேர்தல்கள் இடம்பெறுகின்றன.

இடைத்தேர்தல்கள் இடம்பெறவுள்ள இரண்டு வட்டாரங்களிலும் கணிசமான தொகை தமிழர்கள் குடியிருப்பதாலும், இந்த வட்டாரங்களில் ஏற்கனவே தமிழர்கள் உள்ளூராட்சி உறுப்பினர்களாக இருந்ததாலும், இந்த மாத இடைத்தேர்தல்களில் தமிழர்கள் வெற்றி பெறவேண்டுமென்ற எதிர்பார்ப்பும் ஆர்வமும் பரவலாக காணப்படுகிறது.

ஸ்காபரோ - றூஜ்பார்க் வட்டாரத்தில் இருபது வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர். இவர்களுள் நால்வர் தமிழர். முன்னர் கல்விச்சபை உறுப்பினராகவும், ரொறன்ரோ மாவட்ட கல்விச்சபை தலைவராகவும், ஸ்காபரோ - றூஜ்பார்க் வட்டார நகரசபை உறுப்பினராகவுமிருந்த நீதன் ஷான் (சண்முகராஜா) நன்கறியப்பட்ட சமூகப் பணியாளர். கல்விச்சபை உறுப்பினராகவிருந்த அனு சிறீஸ்கந்தராஜா, மற்றும் ஷியான் சின்னராஜா, அனிதா ஆனந்தராஜன் ஆகியோர் இங்கு போட்டியிடும் மற்றைய தமிழர்கள்.

ஸ்காபரோ - றூஜ்பார்க் தொகுதியின் நாடாளுமன்ற உறுப்பினராக ஹரி ஆனந்தசங்கரி, ஒன்ராறியோ மாகாண சபை உறுப்பினராக விஜய் தணிகாசலம் ஆகியோர் பிரதிநிதித்துவம் செய்வதால், நகரசபை உறுப்பினராகவும் தமிழர் ஒருவரே தெரிவாக்கவேண்டுமென்ற ஆர்வம் இங்கு காணப்படுகிறது. ஆனால், நான்கு தமிழர்கள் போட்டியிடுவதன் காரணமாக தமிழர் வாக்குகள் சிதறடிக்கப்படுமென்பதால், வேற்றின மக்களின் வாக்குகளை பெற்றால் மட்டுமே எதிர்பார்ப்பு சாத்தியமாகலாம். இந்த வட்டாரத்துக்கான முற்கூட்டிய வாக்குப்பதிவு 20ம் 21ம் திகதிகளில் இடம்பெறும்.

மார்க்கம் நகரசபையின் 7ம் வட்டாரத்தில் எட்டு வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர். இவர்களுள் கிள்ளி செல்லையா, ஆரணி முருகானந்தன் ஆகியோர் தமிழர்கள். இந்த வட்டாரத்தில் முதலாவது தமிழராக வெற்றிபெற்றவர் லோகன் கணபதி. 2006ம் ஆண்டிலிருந்து 12 வருடங்களாக மூன்று தேர்தல்களில் இவர் தொடர்ச்சியாக வெற்றி பெற்றிருந்தார்.

2018ம் ஆண்டிலிருந்து லோகன் கணபதி ஒன்ராறியோ மாகாண சபை உறுப்பினராகவுள்ளார். யோர்க் பிராந்திய கல்விச் சபை உறுப்பினராகவும் இதன் தலைவராகவும் பணியாற்றிய ஜுனைதா நாதன், 2022 முதல் இந்த வருட ஏப்ரல் மாதம் வரை 7ஆம் வட்டாரத்தின் உறுப்பினராக இருந்தார். இந்தப் பின்னணியில் இம்முறையும் ஒரு தமிழர் இந்த இடைத்தேர்தலில் வெற்றிபெற வேண்டுமென்ற குறியுடன் பரப்புரைகள் இடம்பெறுகின்றன. இந்த வட்டாரத்துக்கான முற்கூட்டிய வாக்களிப்பு இந்த மாதம் 26, 27, 28 ஆகிய மூன்று நாட்கள் இடம்பெறும்.

ரொறன்ரோ, மார்க்கம் உட்பட ஒன்ராறியோவின் சகல உள்ளூராட்சி சபைகளுக்குமான தேர்தல் அடுத்த வருடம் அக்டோபரில் இடம்பெறவுள்ளது. தற்போதைய இரண்டு இடைத் தேர்தல்களில் வெற்றி பெறுபவர்கள் அதுவரையான ஒரு வருட காலத்துக்கு உறுப்பினர்களாக இருப்பார்கள்.

# நாங்கள் இடம் மாறியுள்ளோம்!
# எங்கள் சேவைகள் விரிவுபடுத்தப்பட்டுள்ளன!

**Medcentre Health**

Synchronizing Health Sectors

**IMPORTANT ANNOUNCEMENT**

## WE'VE MOVED & EXPANDED!

Now serving you at our new location:

**2225 Markham Road, Ground Floor**
**(Markham Road & Finch Ave. Intersection)**
**Scarborough, ON, M1B 2W4**

Thank you for your continued trust.
We look forward to welcoming you to our new and expanded clinic!

**ONE LOCATION. COMPLETE CARE.**

- **Medcentre Urgent Care**
  (Walk-In Clinic & Urgent Care Centre – since 2014)
- **Medcentre Women's Health Care**
  (Women's Health Care Clinic – since 2022)
- Now Introducing:
  **Medcentre Pharmacy** (Urgent Care Pharmacy)

*Medcentre Pharmacy was launched to support integrated care in response to patient demand.*



வானிலை
கணிக்கக்கூடியது
ஆனால்
உங்கள் எதிர்காலம்
அப்படியல்ல
எங்கள் நோக்கம்
உங்கள்
எதிர்காலத்தை
பாதுகாப்பது
AJITH SABARATNAM
INSURANCE & INVESTMENTS INC.
LIFE INSURANCE
CRITICAL ILLNESS
DISABILITY INSURANCE
NON-MEDICAL INSURANCE
SUPER VISAS
RRSP & RESP
WE TRULY CARE FOR YOU & YOUR LOVED ONES!
647 401 5800
ajithinsurance.ca
ajithsaba@gmail.com
10 Thornmount Dr, Scarborough, Ontario M1B 3J4



EENC.ca Employment and Education Network Canada Inc.

scarborough READERS' CHOICE 2021 GOLD WINNER

TORONTO STAR READERS' CHOICE 2022 DIAMOND WINNER

TORONTO STAR READERS' CHOICE 2023 DIAMOND WINNER

TORONTO STAR READERS' CHOICE 2024 DIAMOND WINNER

## FREE WORKSHOPS

(We are not a school)

### Pre-Study MS-Office Workshops

If you are planning to attend a class at a school remotely, this workshop may help you. These in-person classes are FREE and open to the public.

### Post-Study Boot Camps

While remote learning offers convenience, we have noticed that many graduates are struggling to succeed interviews. As a solution, we have created a half-day, in-person workshops for graduates to review subjects in preparation for the jobs they are applying for. These workshops are free for EENC clients

### 7 STEP - JOB Search Workshops

Step 1: Resume Workshop **Step 2:** One-on-One Resume building Session **Step 3:** Finalizing Resume **Step 4:** Interview Techniques workshop **Step 5:** One-on-One Interview Preparation **Step 6:** Mock Interview **Step 7:** Referrals to Employers. *(Please note: Jobs are not guaranteed by EENC or our staff , these work shops are only availabe to EENC clients).*

JOB FAIR

SCAN ME>>



- Dashi Karen 647-339-3362 *(English, Tamil)*
- Rupa Mothey 647-501-3362 *(English, Hindi, Nepali, Arabic)*
- Luckshi Mahesan 647-720-2115 *(English, Tamil)*
- Neha Bangar 416-268-1987 *(English, Hindi, Punjabi)*
- Usha Sukumar 437-288-6070 *(English, Tamil)*
- Maria Bernardo 647-448-0818 *(English, Tagalog, Visayan)*
- Sudip Mukherjee 647-501-3362 *(English, Hindi, Bengali, Nepali)*
- Jasli P. Thankachan 647-965-3362 *(English, Malayalam, Arabic)*

Employers, if you are looking to hire the right staff, please contact careers@eenc.ca.

Our service is free.

Chapel Ridge

FUNERAL HOME
& CREMATION CENTRE

# Serving the Tamil Community

## OF GREATER TORONTO

உங்கள் உறவொன்றை பிரிந்து தடுமாறும் வேளையில் இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலை
உங்களுக்கு வேண்டாம். அனுபவத்துடன் கூடிய அன்பான சேவையை வழங்குகின்றோம்.



### *At Need Funeral Arrangements*

We provide a full range of service to families who have experienced a loss of a loved one, including:

*• Vistation • Funeral & Memorial Service*
*• Reception • Burial • Cremation*

மார்க்கம், மற்றும் மிசிசாகா
நகரங்களில் எமது சேவை





**Christeen Seevaratnam**
416-258-6759

**Vilosanan Sivatharman**
Funeral Director
416-993-0826



இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாமா?

### *Pre-Arranging: A Wise Choice...*

**FINANCIAL BENEFITS**

- Lock in the cost at today's prices
- Convenient time payments
- Insured against early death

**EMOTIONAL BENEFITS**

- Letting your family know your wishes
- Peace of mind to you & your family
- Relieve the added stress & burden

8911 Woodbine Ave, Markham , ON, L3R 5G1
www.chapelridgefh.com • Email: info@chapelridgefh.com

*A caring part of our community*



NEETHAN SHAN
SCARBOROUGH'S CHAMPION
நீதன் சண் அனுபவம் நிறைந்தவர்.
நமது சமூகத்துக்குப் பல சேவைகளை வழங்கியுள்ளார்.
முன்னாள் நகரசபை உறுப்பினர்.
ரொறொன்ரோ கல்விச் சபைத் தலைவர்.
தமிழ் மரபுத் திங்கள் நிறுவுநர்.
Steeles Ave East
Neilson Ave
Morningside Ave
Lake Ontario
நீதன்:
நமது சமூகத்துக்கு நல்ல சேவைகளை வழங்கியுள்ளார்.
தமிழர் சமூக மையத்தைத் தொடங்கும் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றினார்.
நகர சபையில் எம்மை வலிமையுடன் வழிநடத்தினார்.
நீதன் தேர்ந்தெடுக்கப்பட்டால்:
ஸ்காபரோப்பகுதியில் இளைஞர்களுக்கான வேலை வாய்ப்புகள்.
மூத்தோருக்கு இலவசப் போக்குவரத்துச் சேவை.
வாகனங்களின் அதிவேகம், வாகனத் திருட்டு மற்றும் வீடுகள் உடைத்துத் திருடுதல் ஆகியவை கட்டுப்படுத்தப்பட்ட பாதுகாப்பான சமூகம்.
VOTE
SEP 29
647 852 7574
NEETHANSHAN.CA
Authorized by the Neethan Shan Campaign

Srisakthi Jewellery
3351 Markham Road, Suite 131
Toronto, ON. M1X 0A6
(Markham & Steels - Red Building)
Srisakthijewellery1@gmail.com
B: 416 755 0559 C: 416 625 6677

TVS CARGO
AIR & SEA CARGO, WORLDWIDE COURIER
416-291-3232
info@tvscargo.com
www.tvscargo.com
3351 Markham Rd, Unit 113
Scarborough, ON M1X 0A6

A1 Studio At GTA Square
Rudy Ruthran
GTA Square, 5215 Finch Ave East, #103, Toronto, M1S 0C2.
rudyruthran@gmail.com
Tel: 416-587-5583



NATHAN SRITHARAN
Barrister & Solicitor, Notary Public
305 Milner Ave.
Suite #309
Toronto, Ontario
M1B 3V4
(Milner / Markham)
Tel: 416-499-2760
Fax: 416-499-6534
E-mail: sritharan@nathanlaw.ca

JRB GROUP CORPORATION
Loans, Mortgages, Insurance, Visa,
Real Estate, Master Card, Credit Counselling
Best rate Mortgage Arranged
Almost All Services Available
Business Loans 25K to 500,00
புதிதாக ஆரம்பிக்கப்பட்ட அல்லது ஆரம்பிக்கப்படவுள்ள
சகல வர்த்தகர்களுக்குமான சிறப்பான சேவை!



FINANCE
R. R. Rajkumar B. Com (Hons), MBA
647–289–6164 / 416–655–5577


KEV TAX
KNOWLEDGE & EXPERIENCE IS VITAL
www.kevtax.com
* CORPORATE INCOME TAX
* BOOKKEEPING & ACCOUNTING SERVICES
* PERSONAL INCOME TAXES
* QUALITY SERVICE WITH REASONABLE FEES
* FREE YEAR-ROUND CUSTOMER SERVICE
* CORPORATE AND SOLE PROPRIETORSHIP BUSINESS REGISTRATION
SENIORS / WELFARE RECIPIENTS
ALL RETURNS INCLUDE EFILE SERVICE
FREE EFILE SERVICE
Ganthiy Selvarajah
(B.A. Sri Lanka)
TEL: 416.841.1866
FAX: 1.888.841.8829
kevtax.ganthiy@gmail.com


JUST LISTED!
5225 Finch Ave E 205, Toronto, ON
Middlefield & Finch
$499,000
Suitable for First time Homebuyers or Downsizers
Newly Renovated Washrooms & Kitchen
Close to Temples, Malls, Banks & All Amenities etc.
CALL YOUR PROFESSIONAL SERVICE
Rave
P. Raveenthiran
Sales Representative
Dir: 416-567-2462
Email: realtor.rave@gmail.com
HOMELIFE
HIGHER STANDARDS
Homelife/Future Realty Inc.
HomeLife/Future Realty Inc.,Brokerage
205-7 Eastvale Dr,Markham ON. L3S 4N8
Bus: 905.201.9977



Financial Services
42 YEARS IN BUSINESS
KASI
THIRU
M. KASIPPILLAI & SONS INC.
3228 Eglinton Ave. E., Suite #3, Scarborough, Ont. M1J 2H6
Tel.: (416) 267-8221 Fax: (416) 267-0620




ABBIRAMI
CATERING AND TAKE OUT SERVICE
அபிராமியின் வாழையிலை விருந்து
Tel: (416) 266-5372
2619 Eglinton Ave. East,
Scarborough, Ont M1K 2S2
(Between Brimly & Midland)




பந்தல்
சேவை
Special Event
Tents Service
416-606-5284
அ




Babu Florist Ltd.
6055 Steeles Ave, Unit C114, Scarborough, Ontario. M1X 0A7
Temple, Wedding, Funeral & Others
Indian Malai & Jasmine Flowers Available
Call : M.Babu
416-754-8282
www.babuflorist.com
Email : info@babuflorist.com




BAYVIEW HOMES DESIGN LTD.
Dream Becomes Reality
Building Permits
Minor Veriance
Lot Severance
Legal Basement
Project Management
Kathir
416 856 6900
Subramaniam
Kathirgamanathan P.Eng.
BCIN 45205
email: kathirhomes@gmail.coml




சிவஸ்ரீ
சிவ. ஜனார்த்தன
குருக்கள்
647-449-6542
aarthananyathu@gmail.com
aarthanan@hotmail.com




KANAGAAMBIKAI
GOLD HOUSE
We Sell
Singapore Jewellery
Finest Quality 22K Gold
Diamonds/ Birth Stones/ Jewellery/ Watches
We Provide
Jewellery Repairs
Gold Items
3160 EGLINTON AVE,E.,UNIT #3,
SCARBOROUGH,ON M1J 2H4
Tel:416-269-7197




8 Shadlock St Unit #6,
Markham, ON L3S 3K9
Tel : 416-321-7552
INDRAN SWEET
& Ice Cream

# அனைத்துலகத் தமிழர் பேரவை

## இலங்கையின் வடக்கு கிழக்கின் பகுதிகளின் ஒருங்கிணைந்த அபிவிருத்தி வாய்ப்புகள் குறித்த பன்னாட்டு ஆய்வு மாநாடு

### எதிர்வரும் ஒக்டோபர் 10ம் திகதி முதல் 12ம் திகதி வரை றொறன்ரோ பல்கலைக்கழகத்தில் நடைபெறவுள்ளது

இந்த சர்வதேச அறிவியல் மாநாடு, உலகெங்கும் பரவி வாழும் தமிழர்களின் மொழி, கலாசாரம், கல்வி, சமூக முன்னேற்றம், அபிவிருத்தி மற்றும் அறிவியல் ஆராய்ச்சி போன்ற துறைகளில் முன்னேற்றகரமான வழிமுறைகள் குறித்த ஆய்வுக் கட்டுரைகளையும் கருத்து வெளிப்பாடுகளையும் பகிரந்து கொள்ளும் மிக முக்கியமான ஒரு தளமாக அமையவுள்ளது.

**பின்வரும் விடயப் பரப்புகளில் ஆய்வுக் கட்டுரைகள் கோரப்பட்டுள்ளன**

தன்னிறைவு மற்றும் இயற்கை வளங்களை பயனுள்ள முறையில் பயன்படுத்துதல், மின்மய மாற்றமும் வளர்ச்சிக்கான தகவல் தொடர்புத் தொழில்நுட்பமும், காலநிலை மாற்றம் மற்றும் அதன் பொருளாதார விளைவுகள், சிறந்த கல்வி மற்றும் வேலை வாய்ப்புகள் மூலம் வினைத்திறன் மிக்க தொழிலாளர் சமூகத்தை உருவாக்குதல், இளைஞர்களின் இடம்பெயர்வு விருப்பங்களும் உள்ளூர் வேலை வாய்ப்பு தீர்வுகளும், பாலின வலிமைப்படுத்தல் மற்றும் சமூக ஒருங்கிணைப்பு, விவசாயத் துறையின் நவீனமயமாக்கல், மீன்பிடி துறையின் நவீனமயமாக்கல், நிலைத்தன்மை கொண்ட சுற்றுலா மற்றும் அதனூடான வேலை வாய்ப்புகள், மின்மயமாக்கல் மற்றும் புதுப்பிக்கத்தக்க ஆற்றல், மக்களின் ஆரோக்கியத்தையும் வீடமைப்பையும் மேம்படுத்துதல், புலம்பெயர் சமூகத்தின் பங்களிப்பில் நேரடி முதலீட்டு வாய்ப்புகளை உருவாக்குதல், இடம்பெயர்ந்த மக்களை மீள்குடியேற்றுவதில் எதிர்கொள்ளப்படும் சாவல்களும் அதற்கான தீர்வுகளும், யுத்தத்தின் பின்னரான பொருளாதார அபிவிருத்தியில் காணப்படும் சாவல்கள், தமிழ் கலாசாரத்தைப் பேணுவதில் உள்ள சவால்கள்,போன்ற விடயங்களில் மகாநாடு கவனம் செலுத்தவுள்ளது.

எமது தாயகத்தில் நிலையான பொருளாதார சமூக அபிவிருத்தியை நோக்கமாக கொண்டு இந்த மாநாடு வடிவமைக்கப்பட்டுள்ளது. தமிழர்களின் அறிவியல் பங்களிப்பு, கலாசார பாரம்பரியம் மற்றும் உலகளாவிய ஒற்றுமையை வலியுறுத்தும் ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்வாக இது அமையவுள்ளது. உலகில் பல்வேறு நாடுகளில் பரந்து வாழும் தமிழ் அறிஞர்கள் பலரும் தமது ஆய்வுக் கட்டுரைகளை மகாநாட்டில் சமர்ப்பிக்கவுள்ளனர். இந்த ஆய்வுகள் எமது தாயகத்தின் முன்னேற்றத்தை மையப்படுத்தியதாக அமையும் என்பதோடு அங்குள்ள கள நிலைமையினை அறிவுபூர்வமாக அணுகுவதற்கான வாய்ப்பினையும் வழங்கும். இதன் மூலமாக வடக்கு கிழக்கின் முன்னேற்றத்திற்கு நாம் மேற்கொள்ள வேண்டிய முக்கிய விடயங்கள் குறித்த தெளிவினை பெற்றுக்கொள்ள முடியும். இந்த மகாநாடு தொடர்பான விடயங்களை conference.tamilfederation.org என்ற இணையத்தளத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.

மேலதிக விபரங்களுக்கு conference@tamilfederation.org மூலம் எம்மை தொடர்புகொள்ளலாம்.

**முரளி சிவகுரு**
மகாநாடு ஒருங்கிணைப்பாளர்

Full Presentation Deadline: **September 19, 2025**

**Registration Deadline for Participants**
Early bird registration: September 19,2025. $50 Standard registration (Regular $75)
$20 Students and Seniors (Regular $25)
Lunch and refreshments are included in the registration fee.
On request, limited number of fee waivers available.

# கலைமுகம் -3

ஈழத்தின் கலை ஆளுமைகள் என அரங்க அளிக்கையாளர்களையே அதிகமாக நாம் விளித்து வருகிறோம். ஆனால், அரங்கின் பின்னணியில் இருந்து பணியாற்றி அரங்கேறும் கலை வடிவங்களுக்கு உயிர் கொடுக்கும் கலைஞர்களைப் பதிவுகள் முன்னிலைப்படுத் - துவதில்லை.

ஓர் ஓரமாக இருந்து அவர்கள் கலைப்பணி - யாற்றுவது போல அவர்களது பெயர்களும் ஓர் ஓரமாகவே பதிவாகின்றன.

யாழ்ப்பாணத்தின் அடையாளங்கள் பலவுள்ளன. அசைபவை, அசையாதவை என அவற்றை வகைப்படுத்தலாம். இதற்குள் இசையாய், நடிப்பாய், ஆடலாய், பாடலாய் எனப்பல கலைவடிவங்கள் எங்கள் தேச அடையாளங் - களாக இடம்பிடித்திருக்கின்றன.

எங்கள் தாயக மண்ணின் ஒலி, ஒளி அடையாளங்களை பதிவு செய்து புகழ் பெற்ற தொழில்நுட்ப நிபுணர் து. நித்தியானந்தன் (நித்தி அண்ணா என்று எல்லோராலும் அன்போடு அழைக்கப்பட்டு வந்தவர்) அவர்களை கலைமுகத்தில் நினைவுகூர்கிறோம். இவரது ஒலி,ஒளிப்பதிவுப் பணி - போருக்கு முந்தியதா - கவும், போர்க்காலத்துக்குரியதாகவும் நகர்ந்துள்ளது.

இவரின் இல்லமே ஒரு கலைக்கூடம். இதில் கால்பதிக்காத ஈழத்தின் கலை ஆளுமைகள் இல்லை என்றே கூறலாம். பேராசிரியர் கா. சிவத் - தம்பி, 'கலைத்தூது' மரியசேவியர் அடிகளார், இசைவாணர் எம். கண்ணன், 'யாழ்' ரி. சீலன், யாழ். ரமணன், 'குழந்தை' ம. சண்முகலிங்கம், 'மாமனிதர்' எஸ்.ரி. அரசு, சங்கீதபூஷணம் பொன் சுந்தரலிங்கம், சங்கீதபூஷணம் ச.பாலசிங்கம், மருத்துவர் தி. கங்காதரன், 'கலைஞானிதன்' பீ.எச். அப்துல் ஹமீத், 'மரிக்கார்' ராம்தாஸ் 'மதுரக்குரலோன்' கே.எஸ். ராஜா, 'உங்களில் ஒருவன்' லோகேஷ், 'மணிக்குரல்' மேஜர் சண், 'பொப்பிசைப்பிதா' நித்தி கனகரட்ணம், 'பொப்பிசைச் சக்கரவர்த்தி' ஏ.ஈ. மனோகரன் என மிக நீண்ட வரிசை. அடியேனுக்கும் (எஸ்.கே. ராஜென்) அக்கலைக்கூடம் கோயிலாக இருந்தது. இந்தக் கலைக்கூடத்தில் 'தாயகக்கவி' புதுவை இரத்தினதுரை அவர்களின் கலைப்பாதங்களும் பதிந்தன.

அக்கலைக்கூடம் 'சிங்லையர் ரேடியோனிக்ஸ் றெக்கோடிங் ஸ்ரூடியோ' என அப்பொழுது பெயர் தாங்கியிருந்தது. பெரும்பாலும் இங்கே தமிழகத் திரைப்படப்பாடல்கள் ஸ்பூல் ரேப் (Spool tape), கசெற் (Cassette) என்பவற்றில் மீள்பதிவு செய்யப்படும்.



எஸ்.கே. ராஜென் - மூத்த ஒலிபரப்பாளர்

## ஈழதேசத்தின் ஒலி-ஒளி ஆளுமை

ஒலிப்பதிவுப் பணியுடன், ஒலி, ஒளிப்பதிவுக் கருவிகள் எதுவாக இருந்தாலும் அவற்றைச் சீரமைப்பதில் நித்தி வல்லுனர். சாதாரணமாக விழாக்களில் ஒலிக்கும் ஒலிபெருக்கிகளில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தியவர். ஒலிபெருக் - கியிலுள்ள யூனிற்றை மிக நுட்பமாக செப்பனிடுவார். இதனால் ஒலிபெருக் - கியிலிருந்து வரும் பாடல், இசை என்பன மிகத்துல்லியமாக இருக்கும்.

யாழ்ப்பாணத்தில் றீகல் சவுண்ட், கோண்டாவில் புலவர் சவுண்ட், பண்டத்தரிப்பு றொலெக்ஸ் சவுண்ட், வெஸ்றெக்ஸ் சவுண்ட் என ஈழத்தின் வட புலத்தில் அன்று இயங்கிய ஒலியமைப்பாளர்கள் அனைவருமே நித்தி அவர்களின் சேவையைப் பெற்றுக்கொண்டார்கள். எந்த ஓர் ஒலி - ஒளிச் சாதனமானலும் அதனைப் பிரித்து உள்ளே இருக்கும் விடயங்களை ஆராய்ந்து அவற்றில் மாற்றங்களை ஏற்படுத்திக்கொள்வார்.



யாழ்ப்பாணத்தில் அப்பொழுது இயங்கிவந்த வின்ஸர் படமாளிகையி - லேயே முதலில் ஒலியமைப்பை சீர் செய்தார். தொடர்ந்து யாழ்ப்பாணத்தி - லுள்ள அத்தனை படமாளிகைகளினதும் ஒலி இவரால் சீர் செய்யப்பட்டது. படமாளிகைகளில் முன்னர் ஒலிச்சாத - னத்தில் பழுது ஏற்பட்டால் கொழும்பில் இருந்தே தொழில் நுட்பவியலாளர்கள் வருவார்கள். அந்த நிலையை மாற்றியவர் எங்கள் தொழில் நுட்ப நிபுணர் நித்தி.

யாழ்ப்பாணம் பேருந்து நிலையத்தில் 1978ல் ஆரம்பிக்கப்பட்ட பெஸ்ரோன் ஒலிபரப்பு நிலையத்தின் ஒலிபரப்பு சாதனங்களை வடிவமைத்து, ஒலிபரப்பு சீராகவும் சிறப்பாகவும் நடைபெற வழிகாட்டியவர் நித்தி.

அப்பொழுது இலங்கை வானொலி நிலையத்திலிருந்து பெஸ்ரோன் ஒலிபரப்பு நிலையத்துக்கு வருகை தந்திருந்த பீ.எச். அப்துல் ஹமீத் ஒலியமைப்பின் சிறப்பை வியந்தார்.

ஒரு சாதாரண Toa amplifier ஒலிபரப்பி சாதனத்திலிருந்தா இவ்வாறு சிறப்பாக ஒலி வருகிறது என வினவினார். இதுவே பின்னாளில் இலங்கை வானொலி நிலையத்துக்கான ஒலிப்பதிவுகளை நித்தி அவர்கள் யாழ்ப்பாணத்திலிருந்து மேற்கொள்ள வழி வகுத்தது.

யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் முதன் முதலாக நடத்தப்பட்ட பீ.எச். அப்துல் ஹமீத்தின் பாட்டுக்குப்பாட்டு நிகழ்ச்சியை முழுமையாக ஒலிப்பதிவு செய்து வழங்கியிருந்தார். ஈழத்துப் பாரம்பரிய இசை வடிவங்கள் என ஒரு இசைத்தட்டு இலங்கை வானொலி நிலையத்தால் தயாரிக்கப்பட்டது.

இதற்கான ஒலிப்பதிவுகளை யாழ்ப்பாணத்திலிருந்து மேற்கொண்டவர் நித்தி. 'கலைத்தூது' மரியசேவியர் அடிகளாரின் 'பலிக்களம்' நாடகம் வீடியோவில் ஒளிப்பதிவு செய்யப்பட்டது. வீடியோ கருவிகள் யாழ்ப்பாணத்துக்கு அறிமுகமான காலகட்டத்தில் இது நடைபெற்றது.

(30ம் பக்கம் வருக)

SSSIO Canada Presents

100 One World One Love

# ONE WORLD ONE LOVE

100th Birth Anniversary Celebration of

*Sri Sathya Sai Baba*

## Sunday, October 5th, 2025

2:30 PM – 6:00 PM

Pearson Convention Centre


2638 Steeles Ave E, Brampton, ON L6T 4L7

*A National Offering of*

## Music, Drama, Devotion & Unity

Join us for a memorable afternoon of spiritual reflection, soulful music, and meaningful community connection. This special multi-faith event honours the enduring legacy of Sri Sathya Sai Baba and celebrates His profound impact across the world.

Scan the QR code or visit https://bit.ly/3Ij8r8F to register and get your free tickets.



# ஒன்ராறியோ - ரொறன்ரோ இணைந்து அதிக வீடுகள் உருவாக்கத் திட்டம் !



ஒன்ராறியோ அரசும் ரொறன்ரோ மாநகர சபையும் இணைந்து பேருந்து தொடர் நிலையங்கள், நிலக்கீழ் வழித்தடங்களுக்கு அருகில் அதிக வீடுகளை நிர்மாணிக்கவுள்ளன. இத்திட்டம் 120 போக்கு - வரத்து நிலையங்களுக்கு அருகில், குறிப்பாக ஸ்காபரோ பகுதிகளில், உயரமான அடுக்குமாடிக் குடியிருப்புகளைக் கட்டுவதற்கான வழியை ஏற்படுத்திக் கொடுக்கும்.

இதனடிப்படையில் ரொறன்ரோவில் வரும் 25 ஆண்டுகளில் 1.5 மில்லியனுக்கும் அதிகமான புதிய வீடுகள் அமைக்கப்படலாம். இதனால் குடியிருப்பாளர்கள், புதிதாகக் குடியேறுபவர்கள் மற்றும் இளையோர், கல்விக்கூடங்களுக்கும் வேலைத்தலங் - களுக்கும் அருகில் வசிக்க வழியேற்படும். “போக்குவரத்தின் முக்கியத்துவத்தையும், அதுவே மக்களை அவர்கள் இல்லங்களிலிருந்து அவர்கள் செல்ல வேண்டிய இடங்களுடன் இணைப்பதற்கு இன்றியமையாதது என்பதையும் எமது அரசு அறிந்துள்ளது” என்றார் அமைச்சர் விஜய் தணிகாசலம். ஸ்காபரோ நிலக்கீழ் வழித்தட நீடிப்பில் லோரன்ஸ் கிழக்கு, ஸ்காபரோ மத்தி, மற்றும் ஷெப்பேட் கிழக்கு ஆகிய மூன்று புதிய நிலையங்கள் அமையவுள்ளன.

---

# ஈழதேசத்தின் ஒலி–ஒளி...

(28ம் பக்கத் தொடர்ச்சி )

நித்தி அவர்களின் வீடு ஒரு படப்பிடிப்புத் தளமாகியது. இரண்டு வீடியோ டெக்குகளை வைத்து அப்பொழுது அதனைத் தொகுத்திருந்தார். ‘பலிக்களம்’ ஒளிப்பதிவை இப்பொழுது பார்த்தாலும் வியப்பு ஏற்படும். யாழ்.ரி. சீலனுக்குப் பெரும் புகழைத் தேடிக்கொடுத்த ‘ஹவாய்ன் கிற்றார்’ இசையை ஒலிப்பதிவு செய்தவர் நித்தி.

தேச விடுதலைப் போருக்கு முன்னரான காலகட்டத்தில் அவரது பணிகளில் சிலவே இங்கு வரிசைப்படுத்தப்பட்டுள்ளன. எங்கள் தேச விடுதலைப் பயணத்தில் ஒலி-ஒளி நிபுணர் நித்தி தனது துறைசார் பணிகளை ஆற்றியுள்ளார்.

அவை அடுத்த இதழில்.

---


Real estate excellence, every time.

Rajmogan Selliah
Sales Representative

Direct: 416 569 3200

Email: srajmogan@gmail.com

Buy | Sell | Lease | Invest

210 - 80 Corporate Drive,
Toronto, ON M1H 3G5
Office: 416 284 5555




Residential, Commercial and Investment Properties


ALL YOUR CATERING NEEDS
CALL 416 - NANTHA 1 ext. 1
416 - 626-8421 ext. 1
FEEL GOOD
Taste Together
நந்தா உணவகம்
NANTHA RESTAURANT
INDIAN / CEYLON TAMIL RESTAURANT IN GTA
Kipling & Steeles
(416-NANTHA-1 Ext. 2)
#18 - 5010 Steeles Ave W Etobicoke, ON M9V 5C6
Warden & Finch
(416-NANTHA-1 Ext. 3)
Bridlewood Mall #106 - 2900 Warden Ave, Scarborough, ON M1W 2S8
Middlefield & Steeles
(416-NANTHA-1 Ext. 4)
#2 - 2002 MiddleField Rd Markham, ON L3S 1Y5
(Beside Fresh Food City Super Store)
(416-NANTHA-1 Ext. 5)
#8 - 2200 Brock Rd, Pickering, ON L1X 2R2
Food Court - 6, Majestic City
(416-NANTHA-1 Ext. 6)
2900 Markham Rd, Scarborough, ON M1X 1E6
416 - NANTHA 1 | 416 - 626-8421
www.nantha.com

# காலத்தை வென்ற ஒரு கப்பல்...

(08ம் பக்கத்திலிருந்து )



எனது மாமியாரின் நண்பர் ஒருவரை வாகனத்தில் ஏற்றிச் - செல்ல வேண்டியிருந்தது. அவர் ஒரு 'சைவப்பழம்' என்று விபரிக்கப்படக்கூடியவர். அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் வாழும் வெள்ளையின அமெரிக்கர் ஒருவரின் முருக பக்தியை வியந்து போற்றி, அவர் முருகனைப் பற்றி எழுதியுள்ள புத்தகங்கள் பற்றியும், கதிர்காமம் பற்றி அவரது ஆராய்ச்சிகள் பற்றியும் வாயூறியபடி சொல்லிக் கொண்டிருந்தார். சற்று நேரத்தின்பின், நான் அவரிடம் "உங்களுக்கு முற்பிறப்பில் நம்பிக்கை இருக்கிறதா?" என்று கேட்டேன். என் கேள்வியின் அர்த்தத்தை அவர் உடனே புரிந்து கொண்டார். "ஏண்டா.... என் பூரிப்பு எல்லாத்தையும் தவிடு பொடி ஆக்கி விட்டாயேடா!" என்று அவர் அங்கலாய்த்தார்.

அதுபோல், இந்தக் கப்பலின் கதை மிகவும் சுவாரஸ்ய - மானதுதான். ஆனால், இந்த சம்பவம் நடந்து 40 ஆண்டுக - ளுக்குப் பிறகுதான் கதை வெளியே தெரியவருகிறது. அது நடந்த நேரத்தில் கப்பலில் இருந்த மாலுமிகளோ, பயணிகளோ யாராலும் இந்த சாதனை பற்றிய எந்த குறிப்பும் பகிரங்கமாக எங்கும் அறிவிக்கப்பட்டதாகத் தெரியவில்லை. பத்திரிகைக் கட்டுரையில் விவரிக்கப்பட்டுள்ளபடி, 1900ம் ஆண்டின் கடல் வழிசெலுத்தல் நுட்பங்கள், கப்பலை அறிக்கையிடப்பட்ட இடத்தில் துல்லியமாக நிலைநிறுத்த போதுமானதாக இல்லை.

பன்னாட்டு திகதிக் கோடு ஒரு நேர் கோடு அல்ல. அது பசிபிக் பெருங்கடலில் பூமத்திய ரேகையைக் கடக்கிறது, தோராயமாக 180° தீர்க்க ரேகையில் செல்கிறது. இருப்பினும், அரசியல் மற்றும் புவியியல் எல்லைகளுக்கு ஏற்ப பல இடங்களில் இந்த தீர்க்க ரேகையிலிருந்து விலகிச் செல்கிறது. எடுத்துக்காட்டாக, கிரிபஸ் என்ற நாட்டை சேர்ப்பதற்காக அது கிழக்கு நோக்கி வெகுதூரம் நகர்ந்து பின்னர் மேற்கு நோக்கித் திரும்பி, சமோவா மற்றும் அமெரிக்க சமோவா இடையே செல்கிறது. எனவே அவர்கள் கப்பல் எங்கே குறுக்கே சென்றது என்பது தெளிவாகத் தெரியாது.

இன்னொரு சிறு தவறும் சுட்டிக் காட்டப்பட வேண்டும். 1900ம் ஆண்டு ஜனவரி முதல் நாள் இருபதாம் நூற்றாண்டு தொடங்க - வில்லை. அந்த வருட முடிவில் தான் பத்தொன்பதாம் நூற்றாண்டு நிறைவடைந்திருக்கும். உண்மையில் ஒரு வருடம் கழித்து, 1901ம் ஆண்டு ஜனவரி முதல் நாள் அன்றே, இருபதாம் நூற்றாண்டு தொடங்கியது.

இந்தக் கப்பல் ஒரு நூற்றாண்டுக்குப் பிறகு, 1918ம் ஆண்டில் முதல் உலகப் போரின் போது துனிசியாவிலிருந்து பிரான்ஸ் வரை துருப்புக்களை ஏற்றிச் செல்லும் ஒரு தொடரணியில் பயணித்துக் கொண்டிருந்தபோது, 'கட்டபோல்ட்' என்ற நாசகாரக் கப்பல் அதன் மீது மோதியதில் இரண்டு கப்பல்களும் கடலில் மூழ்கின. கட்டபோல்ட்டின் 58 பணியாளர்கள் மற்றும் வாரிமூவில் இருந்த ஒருவர் கொல்லப்பட்டனர்.

முதன்மை மாலுமி Captain John D. Phillips அவர்களின் பதிவேடு (Logbook) கிடைக்கப்படாததால், இந்தக் கதையை உறுதிப்படுத்த முடியவில்லை. ஆனால், 1900ம் ஆண்டு ஜனவரி 10ம் திகதி ஆஸ்திரேலியாவின் சிட்னி துறைமுகத்திற்கு எஸ்எஸ் வாரிமூ வந்தடைந்ததை அறிவிக்கும் பதிவு இருக்கிறது. அதில், 1899ம் ஆண்டு டிசம்பர் 30ம் திகதி அன்று பூமத்திய ரேகையைக் கடந்ததாகப் பதிவு இருக்கிறது. பூமத்திய ரேகையைக் கப்பல் மூலம் கடப்பவர்களுக்கு 'golden shell-back' என்ற சான்றிதழ் வழங்கப்படுகிறது. இந்தப் பதிவுகள் இந்தக் கதைக்கு சில நம்பகத்தன்மையைக் கொடுக்கிறது.

இருந்தாலும், 2000ம் ஆண்டு டிசம்பர் மாதம் 31ம் திகதி ஏதாவது ஒரு கப்பல் இப்படியான சாதனையை மீண்டும் செய்ய முயற்சித்ததா என்று ஏதேனும் பதிவுகள் இருக்கின்றனவா என்று நான் தேடினேன்..... இதுவரை எதையும் நான் காணவில்லை.

இந்தக் கதையை நீங்கள் நம்புகிறீர்களா? அல்லது, உங்கள் பிரமிப்பை நான் தகர்த்து விட்டேனா?

(11ம் பக்கத்திலிருந்து )

# வாந்தியை வணங்குவோம்...

கல்யாணமாகி ரொம்ப நாளாச்சு வாந்தி ஏதாவது எடுக்கிறாளா? என்பது பலரின் ஆதங்கமும் எதிர்பார்ப்பும், மனிதன் மகிழ்ச்சி அடையும் ஒரேயொரு வாந்தியும் அதுதான். American Academy of Family Physician என்ற அமைப்பின் கருத்துப் - படியும் மற்றைய ஆய்வுகளின்படியும் கர்ப்பகால வாந்தி ஏன்,எதனால் ஏற்படுகிறது என்பது பற்றிய காரணங்கள் இன்னும் தெளிவாக தெரிந்து கொள்ள முடியவில்லை. ஆனாலும் கர்ப்ப காலத்தின்போது ஏற்படும் ஹோமோன்களின் மற்றும் உயிர்ரசாயன மாற்றங்களின் காரணமாக வாந்தி ஏற்படலாம் என்ற கருத்து நிலவுகிறது.

தாயின் உடலானது தொடக்கத்தில் கர்ப்பத்தில் உருவான கருவை ஒரு வெளிப்பொருள் (Foreign body) என்று எண்ணி அதை வெளியேற்றும் பொறிமுறையை சமன் செய்து உடல் கருவறையிலுள்ள கருவை ஏற்றுக்கொள்ளும் முயற்சியில் வாந்தியின் பங்களிப்பும் இருக்கலாம் என்பது உறுதி செய்யப்படாத தகவல்கள் இருக்கிறது.

சில பெண்களுக்கு கர்ப்ப காலத்தில் காரணம் அறியப்படாத மிகுந்த வாந்தி (hyperemesis gravidarum) என்னும் பிரச்சனையும் ஏற்படுகிறது. நிறைவாக, வாந்தி என்ற உடல் மொழியை சரியாக கையாளும்போது உயிராபத்தை தவிர்த்துக் கொள்ளலாம். குறிப்பாக வாந்தியோடு இணையாக வரும் மற்ற உடல் குறிகள் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். உதாரண - மாக தொடர்ச்சியான வாந்தி வயிற்றுப்போக்கு, வாந்தியினால் உண்டாகும் நீரிழப்பு, காய்ச்சல். ரத்த வாந்தி, தலைசுற்று மயக்கம், தடுமாற்றம், உணர்வற்ற நிலை, அதிக வயிற்றுவலி போன்றவையும் இருந்தால் உடனடியாக மருத்துவ கண்காணிப்பு அவசியம் என்பதையே வாந்தி உணர்த்துகிறது.

# NKS Draperies & Blinds

210 Silver Star Road, Unit. 825
(Midland & Finch) Scarborough, ON
**416 321 6420**





- Vertical blinds
- Venetian blinds
- Draperies
- Curtains
- Shutters

உங்கள்
இல்லங்களை
மாளிகையாக்கிட

அழையுங்கள்
**கேதா**

தமது சிறப்பான சேவையினால்
தகுந்த விருதுகளைப் பெற்ற நிறுவனம்



## Dr. Shan A. Shanmugavadivel & Associates

## டாக்டர் அ. சண்முகவடிவேல்



* Orthodontics * Implants * Cerec Crowns

பற்களை ஒழுங்கு செய்தல், 'இம்பிளான்ற்' சிகிச்சைகளில் கனடாவில்
பயின்ற பல வருட அனுபவமுள்ள குடும்ப பல் வைத்தியர்.

**MONDAY - FRIDAY**
**(416) 266-5161**
(Near Kennedy Subway - Rainbow Village Building)

**RAINBOW VILLAGE DENTAL OFFICE**
2466 Eglinton Avenue East, Unit #7
Scarborough, Ontario M1K 5JB



டாக்டர் எம்.கே. முருகானந்தன்

# உட்புற வளி மாசடைதல் - 1

அவருக்கு இருமல். கடுமையான இருமல் அல்ல. வேலைக்குப் போகிறார். வேலைத் தளத்தில் குளிரூட்டி (Air Condition) உள்ளது. இவரால் அங்கு எவருக்கும் தொல்லை இல்லை. அங்கு இருமலே வருவதில்லை. ஆனால் வீடு திரும்பியதும் இருமல் தொடங்கிவிடும். படுக்கச் சென்றால் மிக அதிகம்.

இரவு இருமல் என்றால் ஆஸ்த்மாவா?

தீர விசாரித்தபோதுதான் காரணம் தெரிந்தது. அவர்களது வீட்டின் காற்றோட்டம் போதுமானது அல்ல. அத்துடன் அந்தக் காற்று மாசடைந்ததாக இருக்கும் என்பது புரிந்தது. வீட்டின் காற்று மாசடைத்தலுக்கு முக்கிய காரணம் புகைத்தலாகும். ஆனால் இவர் புகைப்பதில்லை. வீட்டில் வேறு யாரும் புகைப்பதும் இல்லை.

வீட்டின் உற்புறக் காற்று மாசடைவது என்பது உலகளாவிய ரீதியில் பாரிய சுகாதாரப் பிரச்சனையாக மாறியுள்ளது. உலகளாவிய ரீதியில் வருடாந்தம் ஒரு மில்லியனுக்கு மேற்பட்டவர்கள் சுவாச நோய்களால் மரணமடைவது குறிப்பிடத்தக்கது.

இவற்றில் பெரும்பாலானவை, அடுப்புப் புகைகளால் ஏற்படும் மாசுக்களால் ஆகும். சுகந்த மணத்தை ஏற்படுத்தும் புகைகளும் அத்தகையவே.

வீட்டிற்குள் சாம்பிராணிக் குச்சி போன்ற வாசனை ஊதுபத்திகளைக் கொழுத்துவதானது வீட்டின் உற்புறக் காற்றை மாசுபடுத்தி சுவாசப்பையில் உள்ள கலங்களில் அழற்சியை ஏற்படுத்துகிறது என ஆய்வு ஒன்று கூறுகிறது.

அரேபிய நாட்டு வீடுகளில் அதிகம் கொழுத்தப்படும் இருவகை சாம்பிராணிகளைப் புகைக்க வைக்கும்போது வெளிவரும் துகளையும் வாயுக்களையும் ஆய்வாளர்கள் இனங்கண்டார்கள்.

பின்னர் மனித சுவாசப் பையின் கலங்கள் வைக்கப்பட்ட அறையில் அவ்வாசனைப் பொருட்களை புகைக்க வைத்தார்கள். அப்பொழுது அந்தக் கலங்களில் ஏற்பட்ட மாற்றங்களானவை சிகரெட் புகைப்பதால் ஏற்படும் மாற்றங்களை ஒத்ததாக இருந்ததைத் கண்டறிந்தார்கள்.

Oudh, Bahkoor ஆகிய வாசனைப் பொருட்கள் அகர்வூட் மரத்திலிருந்து எடுக்கபட்டவையாகும். வாசனையைக் கொடுக்கும் சந்தன மரப்பிசின், சில எண்ணெய் வகைகள் போன்றவையும் கலந்திருந்தனவாம். அவற்றை எரிக்கும்போது carbon monoxide, formaldehyde, nitrogen oxides ஆகிய வாயுக்கள் வெளியேறி அறையின் காற்றை மாசடையச் செய்தன.

எனவே இவற்றை எரிக்கும்போது வீட்டின் ஜன்னல்களையும் கதவுகளையும் திறந்து வைத்து அப்புகையை வெளியேறச் செய்து வீட்டின் காற்றை மாசடையாது காப்பது அவசியம் என்கிறார்கள் University of North Carolina at Chapel Hill ஐச் சேர்ந்த ஆய்வாளர்கள்.

இவர்கள் முன்பு செய்த மற்றொரு ஆய்வானது இந்த சுகந்த மணப் புகைகளால் கண், காது தொண்டை, சருமம் போன்றவற்றில் எரிச்சல், ஆஸ்த்மா, வேறு சுவாச நோய்கள், தலைவலி, இருதய நோய்கள் போன்றவை ஏற்படலாம் என்றது.

உட்புற வளி மாசடைதல் என்பது வீட்டு வளி மாத்திரம் அல்ல. வீடு, தொழில் செய்யும் இடம் அனைத்தையும் உள்ளடக்கும்.

உட்புற வளியின் தரம் குறைவடைவதால் கிருமித் தொற்றுகள் ஏற்படுகின்றன. சுவாசப்பை புற்று நோய் வருவதற்கான வாய்ப்பை அதிகரிக்கிறது. அத்துடன் ஆஸ்த்மா போன்ற நீண்டு தொடரும் சுவாச நோய்கள் வருவதற்கான சாத்தியமும் அதிகரிக்கிறது. மூக்கடைப்பு, கண் வரட்சி, ஓங்காளம், களைப்பு போன்ற பிரச்சனைகளும் ஏற்படலாம். ஏற்கனவே சுவாச நோய்கள் உள்ளவர்களுக்கு அது மோசமாகும்.

இதைத் தடுப்பதற்கு வழி என்ன? மிக முக்கியமான விடயம் வளியை மாசடையச் செய்யும் காரணங்களைக் கண்டறிந்து அவற்றைத் தடுப்பதுதான். அத்துடன் காற்றோட்டத்தை அதிகரித்து சுத்தமான காற்று உள்ளே வருவதற்கான வழிகளை மேம்படுத்த வேண்டும்.

உட்புற வளி மாசடைவதற்கான சில முக்கிய காரணங்களைப் பார்க்கலாம். பக்றீரியா, வைரஸ், பூஞ்சணம், விலங்கு எச்சங்கள், தூசிப் பூச்சி மற்றும் கரப்பொத்தானின் எச்சங்கள் போன்றவை உயிரியல் மாசு என்பதில் அடங்கும். இவற்றினால் உடலில் கிருமித் தொற்று ஏற்படுகிறது. ஒவ்வாமையை ஏற்படுத்துகிறது. அத்துடன் ஆஸ்த்மா தூண்டப்படுவதற்கும் காரணமாகிறது. இவை சிறிய பிரச்சனை எனச் சிலர் எண்ணினாலும் இவற்றால் வேலை நாட்களில் இழப்பு ஏற்படுகிறது. அத்துடன் பிள்ளைகளின் கல்வியும் பாதிப்படைகிறது.

நாய், பூனை போன்றவற்றை உள்ளே நுளையாது தடுப்பது முக்கியம். அத்துடன் தூசிப் பூச்சியின் தாக்கத்தைத் தடுப்பதற்கு படுக்கை விரிப்பு, தலையணை உறை, துணியாலான கால் மிதிகள், மேசை கதிரை விரிப்புகள் ஆகியவற்றை அடிக்கடி தோய்ப்பதுடன் வெயிலில் உலர வைப்பது அல்லது ஸ்திரி போடுவது அவசியமாகும். குப்பை கூளங்களை அகற்ற வேண்டும்.

மறைமுகப் புகைத்தல் (Secondhand Smoke) என்பது ஒளித்திருந்து புகைப்பது என்பதல்ல. தான் புகைக்காவிட்டாலும் சுற்றாடலில் மற்றவர்கள் புகைப்பதால் ஏற்படும் பாதிப்பையே குறிக்கிறது. கார்பன் மொனோ ஒட்சைட், போர்மல்டிஹைட் உட்பட சுமார் 200 மேற்பட்ட புற்றுநோயைத் தோற்றுவிக்கக் கூடிய நச்சுப் பொருட்கள் மறைமுகப் புகைத்தலால் காற்றில் கலக்கின்றன.

அமெரிக்காவில் மட்டும் இவ்வாறு வீட்டு வளியில் கலக்கும் புகையிலைப் புகையினால் 3000 மேற்பட்டவர்கள் சுவாசப்பை புற்று நோயால் இறக்கின்றனராம். அத்துடன் 50000 பேர் இருதய நோய்களால் இறக்கின்றனர்.

(அடுத்த மாத இதழில் இக்கட்டுரை நிறைவுபெறும்)


OIL CHANGE SPECIAL $34.95
+ Tax & Disposal Fees
Semi-Synthetic Oil Change includes:
Up to 5 L Standard Motor Oil
New Filter
Free Vehicle Inspection
Complete Front & Rear Brake Replacement or $25 off on each
$50 OFF
FREE!
BRAKE OR SHOCK INSPECTION
LIMITED TIME OFFER
SEE STORE FOR DETAILS
MY MECHANIC
இப்போது
இரண்டு இடங்களில்!
MY MECHANIC AUTO & TIRE
4530 Steeles Avenue East
Markham, ON L3R 0L2
905-946-1000
1095 Ellesmere Road,
Scarborough ON M1P 2WP
416-757.1000
info@mymechanicauto.ca
mymechanicauto.ca


உங்களுக்குத் தெரியும்,
நம்பிக்கையுடனான தரமான சேவைகள்..
தகுதியான வெற்றிகளுக்கான
தரமான தெரிவு
On high, with your thoughts
PRO MAR Ltd.
AWARDS & PROMOTIONS
நகரின் முன்னணித் தமிழர் நிறுவனம்
இப்பொழுது
வீடு விற்பனைத்
துறையிலும்
www.promarawards.com 416-291 2344
33 Fieldside Drive, Scarborough ON M1V 2C4

ISSN 1206-0585

